# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 22 வியாழக்கிழமை (05-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:71


புலிகளின் உறுதியான யுத்த நிறுத்தத்துக்குப் பாராட்டு

# ஒன்று சேர்ந்து பேச்சு மூலம் தீர்வு இருகரம் நீட்டுகிறார் ஜனாதிபதி

## சுதந்திரதின உரையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் அழைப்பு



கொழும்பு,பெப்.5

இன்று நாடு எதிர்நோக்கும் மிகப் பாரிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு ஒன்றுசேர்ந்து பேச்சு மூலம் தீர்வுகாண முன்வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று தனது சுதந்திரதினச் செய்தியில் அரசியல் கட்சிகளுக்கு அழைப்புவிடுத்தார். தொடர்ச்சியான யுத்தநிறுத்தம் மூலம் சமாதானத்தினை நோக்கி விடுதலைப் புலிகளும் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளும் காட்டிவரும் கடப்பாட்டுக்கு ஜனாதிபதி பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டுக்குச் சேவை புரியத்தக்க, மெய்யான' அர்ப்பணிப்புள்ள தலைவர்கள் தேவையென்பதையும் ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின்னர் ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி இக்கோரிக்கையை விடுத்தார்.

அரசியல் முரண்பாட்டுக்கு யுத்தமும் ஆயுத மோதல்களுமே தீர்வு என்பதைத் தெற்கிலுள்ள அரசியல் சக்திகளும் இப்பொழுது நிராகரிப்பதையும் பேச்சு, இணக்கப்பாடு பாதையில் செலவதற்கு விருப்பம் கொண்டிருப்பதையும் தனது உரையில் வரவேற்ற ஜனாதிபதி சந்திரிகா மேலும் கூறியதாவது:-

சுதந்திரத்துக்குப் பின்னர் நாம் கடந்துவந்த பாதையை மீண்டும் ஒரு முறை திரும்பி நோக்குவதற்கும், நாம் இழைத்த தவறுகளையும், அந்தத் தவறுகள் திருத்தப்படவேண்டிய அவசியப்பாட்டினையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் தேசிய சுதந்திர தினத்தினை விட மிகவும் பொருத்தமான வேறெந்த சந்தர்ப்பமும் இல்லை என்பதை நான் நேர்மையாக நினைவுகூருகின்றேன். கடந்த 56 ஆண்டு காலத்தில் நாம் பெருமைகொள்வதற்குரிய பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளோம் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை. எனது நாட்டின் அபிவிருத்திக்கும், எமது மக்களின் நல்வாழ்வுக்கும் பங்களிப்புச்

(02ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் நேற்று முழு அளவில் துக்கம்! இயல்புநிலை முடக்கம்!

சுதந்திர தினத்தில் மக்கள் கொதிப்பு!



ஊர் போக அனுமதி கோரி சாவகச்சேரியில் உண்ணாவிரதம்.

யாழ்ப்பாணம்,பெப்ரவரி5

**ஸ்ரீலங்காவின் 56 ஆவது சுதந்திரதினம் நேற்று குடாநாட்டில் முழு அளவிலான துக்கதினமாகக் கழிந்தது; மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர்; கிராமங்கள், நகரங்கள் வெறிச்சோடின; இயல்பு வாழ்க்கை முற்றாகமுடங்கியது.**

சுதந்திர தினக்கொண்டாட்டங்கள் தென்னிலங்கையில் மிகப்பெரும் ஏற்பாடுகளுடன் தடல்புடலாக இடம்பெற்றன. அதேநேரம் குடாநாட்டில் நேற்றையதினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டது. பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அழைப்பை ஏற்று பொதுமக்கள் நேற்று முழு அளவில் துக்கம் அனுஷ்டித்தனர்.

சுதந்திர தினத்தை ஒட்டிய வைபவங்கள் எதுவும் குடாநாட்டில் நடைபெறவில்லை. இராணுவமுகாம்களிலும், படைத்தளங்களிலும் சில கட்சிகளின் அலுவலகங்களிலும் மாத்திரமே தேசியக்கொடியேற்றும் வைபவங்கள் இடம்பெற்றன.

யாழ். அரச செயலகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தேசியக் கொடியேற்றும் வைபவத்தை படையினரும் பொலீஸாரும் இணைந்து நடத்தினர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு நேற்று மகஜர்

யாழ்ப்பாணம்,பெப்.5

மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள வலி. வடக்கு, தென்மராட்சி தெற்கு மக்களுக்கு நீதி வழங்குமாறுகோரி

(16ஆம் பக்கம் பார்க்க)



மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி. வடக்கு மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்.

# சென்றிகள், கட்சி அலுவலகங்களில் நேற்று சிங்கக் கொடிகள் பறந்தன!

குருநகர்,பெப்.5

ஸ்ரீலங்காவின் 56ஆவது சுதந்திர தினமான நேற்று, குடாநாட்டில் பொதுவாகத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டபோதும் அரச அலுவலகங்கள், தமிழ்க் கட்சிகளின் பணிமனைகள், இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்கள் என்பவற்றில் தேசியக் கொடியான சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில், பிரதான வீதியில் அமைந்துள்ள சிறைச்சாலைக் காரியாலயம் மற்றும் சின்னக்கடை சிவில் நிர்வாகக் காரியாலயம் ஆகியவற்றிலும் சிறைச்சாலைக்கு முன்

(14ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. கச்சேரியில் சுதந்திரதின வைபவங்கள் நடைபெறவில்லை

மட்டக்களப்பு,பெப்.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திரதினத்தை முன்னிட்டு நேற்று கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், கடைகள் எதுவும் திறக்கப்படவில்லை; போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை; தூர இடத்துக்கான போக்குவரத்துக்களும் நடைபெறவில்லை; மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறவிருந்த பிரதான சுதந்திரதின வைபவங்களும் நடைபெறவில்லை.

நண்பகல் 12 மணிக்குப் பின் ஒரு சில -பொதுமக்கள் வீதிகளில் நடமாடினர். பொதுச்சந்தைகள் எதுவும் இயங்கவில்லை. முஸ்லிம் பிரதேசம் தவிர தமிழ்ப் பிரதேசங்கள் காலையில் வெறிச்சோடிக்கிடந்தன. தமிழ்ப் பிரதேசங்களில் எதுவித சுதந்திரதின நிகழ்வுகளும் நடைபெறவில்லை.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்றுக் காலை தேசியக் கொடி ஏற்றப்பட்டது. பொலீஸாரால் தரிசனம் விழிப்புல

(14ஆம் பக்கம் பார்க்க)

# புளியங்குளம் சோதனைச்சாவடி மூடப்பட்டதால் பயணங்கள் பாதிப்பு

## வவுனியாவிலிருந்து சென்றோர் திரும்பி வருகை

ஓமந்தைச் சோதனைச் சாவடியிலிருந்து நேற்று யாழ். குடாநாட்டுக்குச் செல்லவிருந்த பயணிகள் புளியங்குளத்திலுள்ள புலிகளின் சோதனைச் சாவடி திறக்கப்படாததால் வவுனியா திரும்பினர்.

ஓமந்தை இராணுவசோதனைச் சாவடி நேற்றுக்காலை வழமைபோல் திறக்கப்பட்டது. யாழ். மற்றும் வன்னி செல்லும் பயணிகள் இராணுவ சோதனைச் சாவடியைத் தாண்டி 500 மீற

(14ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் புடைசூழ்ந்து நிற்க தென்மராட்சியில் மக்கள் மறியல்

## கொளுத்தும் வெய்யிலில் உண்ணாவிரதம்

தென்மராட்சி, பெப்.5

தென்மராட்சியில் மறவன்புலவு, தனங்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோர் தங்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நேற்றுக்காலை உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டங்களை மேற்கொண்டனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டங்களில் குழந்தைகள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மறவன்புலவு - தனங்களப்பு விவசாய சங்கங்களின் தலைவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச செயலகத்துக்கு முன்பாக கொட்டகை போட பொலீஸார் அனுமதிக்காததையடுத்து அங்கு கொளுத்தும் வெய்யிலில் அமர்ந்திருந்தவாறே மக்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

தனங்களப்பைச் சேர்ந்த விநாசித்தம்பி கந்தையா (வயது 70) என்ற முதியவரும் மறவன்புலோ மக்கள் சார்பாக செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் (வயது 42) என்பவரும் சாகும் வரை

(14ஆம் பக்கம் பார்க்க)

# தொடர் உண்ணாவிரதப் போர் வலி.வடக்கில் நேற்று ஆரம்பம்

## நலன்புரி நிலையங்களின் தலைவர்கள் களத்தில்

வலி.வடக்கு,பெப்.5

வலி. வடக்கின் பல பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் வசிக்கும் பலநூற்றுக்கணக்கான மக்கள், ஸ்ரீலங்காவின் சுதந்திரதினமான நேற்று தெல்லிப்பழையில் அமைந்துள்ள வலி. வடக்கு பிரதேச செயலகம் முன்பாக பெரும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்தனர். காலை 8 மணியளவில் ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் தலைவர்கள் 12 பேர் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர். நா.கணேசன், மு.ஜெகநாதன், சி.சிவஞானம், தி.இதயராஜ், செ.செல்வராசா, ச.பானு, வெ.சிவராஜா, வை.தவராஜா, இ.உதயரஞ்சன், பொ.பிரபாகரன், த.தனசீலன், க.தேவலிங்கம் ஆகியோரே உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் இவர்கள் 12பேரும்

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# நவீன இராணுவ வாகனங்களின் பவனியுடன் சுதந்திரதினம் கோலாகலமாகக் கொண்டாட்டம்

## தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள், ஜே.வி.பி. தலைவர்கள் பங்குபெறவில்லை

இலங்கையின் 56 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்றுக் காலை கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெரும்தொகையான பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் இக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் சிறப்பு அம்சமாக பெரும்தொகையான நவீன இராணுவ வாகனங்களின் அணிவகுப்பு அமைந்திருந்தது. பல ஆண்டுகளிற்குப் பின்னர் சுதந்திரதின வைபவம் ஒன்றில் இடம்பெற்ற இந்த இராணுவ வாகனங்களின் அணிவகுப்பு பார்வையாளர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

இராணுவத்தினரின் கவச வாகனங்களும், பீராங்கி, ஆட்லரி, மல்ரிபெரல், இராணுவ செய்திப் பரிமாற்று கட்டுப்பாட்டு வாகனம் மற்றும் ட்ரக் வண்டிகள் என்பன முதன்முறையாக அணிவகுப்பில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

நேற்று அதிகாலை கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராம விகாரை, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில், கொழும்பு பெரிய பள்ளிவாசல், கொஸ்வத்தை பாத்திமா மாதா ஆலயம், கொழும்பு பிரஸ்பேஹெரியன் தேவாலயம் என்பவற்றில் விசேட ஆராதனைகளும் பூஜைகளும் நடைபெற்றன.

காலை 8.30 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சுதந்திரதின விழா ஆரம்பமானது.

அமைச்சர்களான கருஜயசூரிய, அலிக்அலுவிகார, ருக்மன் சேனாநாயக்க, கருணாசேன கொடித்துவக்கு, கொழும்பு மாநகர முதல்வர் பிரசன்ன குணவர்த்தன ஆகியோர் இலங்கையின் முதலாவது பிரதமரான தேசபிதா டி.எஸ்.சேனநாயக்கவின் சிலைக்கு அஞ்சலி செலுத்தினர்.

9 மணிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மோட்டார் சைக்கிள் வீரர்களின் அணிவகுப்புடன் விழா மேடைக்கு வந்தார் பிரதமரை சபாநாயகரும் அமைச்சர்களும் வரவேற்றனர். பிரதமரைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வருகைதந்தபோது பிரதமரும், அமைச்சர்களும் வரவேற்றனர்.

9.05 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா மங்கள பேரிகை முழங்க தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அப்போது ஜனாதிபதியைக் கௌரவிக்கும் வகையில் இராணுவத்தின் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தினார்.

பிரதமரும் ஜனாதிபதியும் ஒரே மேடையில் அமர்ந்து சுவாரஸ்யமாக உரையாடிக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், வெளிநாட்டுத் தூதுவர்களும் வருகை தந்திருந்தனர். வடக்கு-கிழக்கு பிரதேச தமிழ் கட்சிகளில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தவிர வேறு பிரதிநிதிகள் எவரும் இவ்வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை.

அண்மையில் சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்ட ஜே.வி.பி. தலைவர்களும் விழா மேடையில் காணப்படவில்லை.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பின் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் வீரர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர், தேசிய இளைஞர் படையணியினர், பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கோல உடைதரித்த அணிவகுப்புகள் இடம்பெற்றன. திருகோணமலை சென்.மேரிஸ் கல்லூரி மாணவர்களும் கலாசார அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

# நேற்று 1,000 கைதிகள் விடுதலை

56ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து சுமார்1,000 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அடிப்படையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து 39 பெண் கைதிகள் உட்பட 750 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிறு குற்றங்களுக்காகவும் அபராதம் செலுத்த முடியாமலும் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

# தொடர் உண்ணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை துர்க்கை அம்மனை வழிபட்டுவிட்டு வந்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

உண்ணாவிரதப் போரில் குதித்திருப்போருக்கு ஆதரவாக பல நூற்றுக்காணக்கான பொதுமக்கள் பிரதேச செயலகத்தின் வாயிலை அடைத்தவாறு காலை முதல் மறியல் போரில் ஈடுபட்டனர். கறுப்புப் பட்டிகளை அணிந்தவாறு பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் போன்றோரும் போராட்டத்தில் பங்குபற்றினர்.

மக்களின் போராட்டம் காரணமாக அரச அதிகாரிகள் எவரும் பிரதேச செயலகத்துக்குள் செல்லமுடியவில்லை. இதனால் அங்கு தேசியக்கொடி ஏற்றும் வைபமும் இடம்பெறவில்லை.

ஸ்ரீலங்காவின் சுதந்திரதினமான நேற்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டம் தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை தொடரும் என்று நலன்புரி அமைப்புகள் தெரிவித்திருக்கின்றன.


நேற்று இரவிரவாகத் தொடர்ந்த உண்ணாவிரதம் இன்றும் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கு பிரதேச பொது அமைப்புக்கள், இடம்பெயர்ந்தோர் அமைப்புகள் என்பவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-86-150)

### பருத்தித்துறையில் பொலீஸார் சிரமதானம்

ஸ்ரீ லங்கா சுதந்திர தினத்தை ஒட்டி பொலீஸார் நேற்று பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

வல்லை மற்றும் பருத்தித்துறை பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸாரே இப்பணியில் ஈடுபட்டனர். (ஐ-70)



குடாநாட்டிலுள்ள இராணுவக் காவலரண் ஒன்றில் நேற்று சிங்கக்கொடி பறக்கவிடப்பட்டதைப் படத்தில் காணலாம். (படங்கள்:- பிரேம்)

# கொழும்புத்துறை மக்கள் பிரதேச செயலகம் முன் மறியல்

யாழ்ப்பாணம்,பெப்.5

கொழும்புத்துறையின் பல பகுதிகளிலும் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று வசிக்க அனுமதிக்குமாறு கோரி நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு சமீபமாக உள்ள பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்றுக்காலை ஒன்றுகூடிய பொதுமக்கள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மறியல் செய்தனர். அச்சமயம் அங்கு வந்த பொலீஸாரும், படையினரும் பிரதேச செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்ற முயன்றனர் என்றும்-

அப்போது மறியலில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த அவர்கள் முயன்றனர் எனவும் -கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது மறியலில் ஈடுபட்டிருந்த பெண்கள் சிலரைப் பொலீஸார் பலவந்தமாக இழுத்து வெளியேற்ற முயன்றனர் என்றும் கூறப்படுகிறது.

பொலஸார், பெண்களைத் தொட்டு இழுத்து, தாக்கினர் என்று தெரிவிக்கும் முறைப்பாடு ஒன்று நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சுமார் ஐம்பது பேர் ஒன்றாக வருகை தந்து இந்த முறைப்பாட்டைச் செய்தனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7-30)

# ஒன்று சேர்ந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்த பல சாதனைகளை நாங்கள் ஈட்டியுள்ளோம். ஆனால், ஐக்கியப்பட்ட ஒருநாடு என்றவகையில் எமது நாட்டினை நிர்மாணிக்கும் பிரதான குறிக்கோளை இதுவரை நாம் அடையத் தவறிவிட்டோம் என்பதனையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எம்முடன் அரசியல் சுதந்திரத்தினைவென்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது நாம் ஐக்கியப்பட்ட ஒரு நாடு என்றவகையில் இன்னும் எழுந்து நிற்க முடியாமல் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த விடயங்கள் அனைத்தையும் எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பது ஒரு கடுமையான நெருக்கடியாக முகிழ்ந்திருப்பதை இன்று நாம் எதிர்கொள்கிறோம். எமது சுதந்திரத்துக்காகப் போராடிய கடந்த காலத்தலைவர்களின் தொலைநோக்கினை இன்னும் எம்மால் அடைய முடியாமல் உள்ளது. இனப்பிரச்சினை, ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துதல், நன்மையானதும் காத்திமானதுமான நிர்வாகம் ஒன்றினைத் தோற்றுவிப்பது, பொருளாதாரச் சுபீட்சத்தினை அடைவது என்பவை நாம் இன்னும் தீர்வு காணவேண்டிய பிரதான பிரச்சினைகளில் சிலவாக இருக்கின்றன.

இன்று நாம் முகம் கொடுக்கும் மிகக் கடுமையான பிரச்சினையாக இனப்பிரச்சினை இருந்து வருகின்றது. இப்பிரச்சினையால் தூண்டப்பட்ட, இரண்டு தசாப்த காலமாக எமது நாட்டினைச் சீரழித்த கொடிய யுத்தம் இப்பொழுது ஒரு முடிவுக்கு வந்துள்ளது. இந்த யுத்தம் மீண்டும் நடைபெறவேண்டும் என்பதை எவருமே விரும்பவில்லை என்பதனை நான் நன்கு அறிவேன். வெவ்வேறு நோக்குகளைக் கொண்டுள்ள மக்களில் அனைத்துப் பிரிவினரும், சகல சமூகத்தவர்களும் நாசகார யுத்தத்தை நாடாது இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம் என்பதையும் நன்கு உணர்ந்துள்ளார்கள்.

ஆனால், யுத்தத்தை நிறுத்தவது என்பது சமாதானம் ஆகாது. நிரந்தர சமாதானம் ஒன்றினை அடைவதில் உள்ள சவால்களை நாங்கள் மெய்யாகவே எதிர்நோக்குகின்றோம்.

1994ஆம் ஆண்டில் எனது முதல் அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமாதானச் செயற்றிட்டத்தினை இன்றைய அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டுவருவதனை நான் திருப்தியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், பேச்சு மூலமான இந்தத் தீர்வு வெற்றிகரமாக எட்டப்பட்டால் இது ஒரு ஐக்கியப்பட்ட கூட்டுமுயற்சியாகவே இருக்கும். சில குழுக்களுக்கென மட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயற்பாடாக இது இருக்கமாட்டாது. இப்பிரச்சினைக்குப் பேச்சு மூலமான தீர்வொன்றைக் காண்பதனைக் குறிக்கொளாகக் கொண்டு பரவலாக வேறுப்பட்ட நோக்குகளைக் கொண்டபல குழுக்களுடன் இப்பொழுது நாங்கள் பேச்சு நடத்தி வருகின்றோம் அனைத்து அரசியல் சக்திகளும் இந்தக் கருத்துப் பரிமாற்றங்களில் பங்குகொண்டால் மட்டுமே நிலையானதும், கௌரவமானதுமான சமாதானம் ஒன்றினை எம்மால் கண்டுகொள்ள முடியும் என்பது எனது அபிப்பிராயமாகும். இம்மார்க்கத்தில் பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையே கணிசமான அளவு புரிந்துணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். குறைந்தபட்சம் இந்தத் தேசியப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காவது இந்த அரசியல் கட்சிகள் கரம் கோர்த்துச் செயற்படவேண்டும்.

இது மிக அண்மைக் காலத்தில் எனது நாட்டுக்கு முன்னால் என்னால் வைக்கப்பட்ட கருத்தாகமாட்டாது. கடந்த பல ஆண்டுகாலமாக இந்த வேண்டுகோளை நான் தொடர்ந்து முன்வைத்து வருகின்றேன். 1999 டிசெம்பர் 22ஆம் திகதி இரண்டாவது தடவையாக நான் ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டபோது, ஆற்றிய உரையில் பின்வரும் வேண்டுகோளை விடுத்திருந்தேன்.

"விக்கிரமசிங்க அவர்களே, நீங்களும் உங்கள் ஆதரவாளர்களும் இந்த அரசாங்கத்துடன் இணைந்கொள்ள வருமாறு இருகரம் நீட்டி உங்களை அழைக்கின்றேன். உங்கள் தேர்தல் பிரசாரத்தின்போது உங்களால் வழங்கப்பட்ட கடப்பாட்டுக்குச் செயலுருவம் கொடுக்க வருமாறு உங்களையும், உங்கள் ஆதரவாளர்களையும் நான் அழைக்கின்றேன்."

இதே உரையில் எனது தமிழ்ச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் நான் பின்வரும் வேண்டுகோளை விடுத்தேன்."

"பிரபாகரன் அவர்களும், எல்ரீரீஈ.யினர் அனைவரும் வன்முறைகளையும் வெறுப்பினையும் நாடி நின்றமையைக் கைதுறக்குமாறு எனது தமிழ்ச் சகோதரர்களையும், சகோதரிகளையும் நான் இருகை நீட்டி வேண்டிக்கொண்டேன். நீங்கள் சமாதானத்தின் ஒளியினைக் கட்டாயம் பார்க்க வேண்டும். எந்தத் தாமதமும் இல்லாமல் பேச்சுவார்த்தை மேசைக்கு வருமாறு, பிரபாகரன் அவர்களைத் தூண்டுவதற்கு உங்கள் செல்வாக்கு அத்தனையையும் நீங்கள் உபயோகிக்க வேண்டும் எனவும் உங்களை நான் விநயமாகக் கேட்டுக் கொள்கின்றேன். வன்முறைகளைக் துறந்து சமாதானத்தை நிர்மாணிக்கும் பணியில் எங்களுடன் இணைந்து கொள்ள வருமாறு எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களையும் அல்லது ஆதரவாளர்களையும் இணங்கச் செய்வதற்கான வாதங்களை முன்வைக்குமாறு உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார். (ஜனாதிபதியின் உரையின் எஞ்சிய பகுதி [illegible]ளைய உதயனில் வெளியாகும்)

# குடாநாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கத்தினரும் அன்னையர் முன்னணியின[illegible] இணைந்து நேற்றுக்காலையி[illegible]யே செயலகவாயிலை முற்றுகையிட்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையான கலகமடக்கும் பொலீஸாரும் படையினரும் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர். மறியல் போராட்டம் புரிந்த மக்களை அங்கிருந்து விலகுமாறு நிர்ப்பந்தித்தத படையினர், பின்னர் ஒருவாறு செயலகத்தினுள் சென்று தேசியக்கொடி ஏற்றும் வைபவத்தை நடத்தினர். அரச அதிபர் செ.பத்மநாதன் தேசியக் கொடியை ஏற்றினார். அதன் பின்னரும் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

வேறு சில அரச அலுவலகங்களிலும் தேசியக்கொடிகள் ஏற்றப்பட்டன. எனினும், அந்த வைபவங்களில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

யாழ் பல்கலைக்கழகப் பகுதிகளில் வாழை, தோரணங்கள், கட்டப்பட்டு, கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்ததுடன், சோக கீதம் இசைக்கப்பட்டது.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமத்தின் ஏனைய பகுதிகளிலும் முழு அளவில் துக்கம் அனுஷடிக்கப்பட்டது. வீதிகள், முக்கிய சந்தைகள் வெறிச்சோடிக் கிடந்தன.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்துப் படைமுகாம்களிலும் சிங்கக்கொடி ஏற்றப்பட்டிருந்தது. சாவகச்சேரி பிரதானவீதி. நவீன சந்தை ஆகியவற்றின் முன்பாகவும் படையினரின் வாகனங்களிலும் சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடின.

வடமராட்சியில் உள்ள அரச திணைக்களங்கள் பலவற்றில் இராணுவத்தினரே தேசியக் கொடிகளை ஏற்றினர். அத்துடன், கொடிக்கம்பங்களருகே ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலும் சிங்கக் கொடிகள் நேற்றுக்காலை ஏற்றப்பட்டு சுதந்திரதினக் கொண்டாடடங்கள் இடம்பெற்றன. சங்கானை பஸ் நிலையம், பிரதான வீதி ஆகியவற்றின் முன்னால் பெரிய அளவிலான சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஹர்த்தாலினால் நேற்று தீவகப் பகுதியும் முற்றாக வெறிச் சோடிக் காணப்பட்டது. தீவகத்திலுள்ள கடற்படையினரின் முகாம்களில் சிஙகக் கொடிகள் ஏற்றப்பட்டு சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

(ஐ-7-8-11-15-29-30-31-51-70-76-86-117-118-135-139-150-173)


# சுதந்திர தினத்தில் குடாநாட்டின் உணர்வலைகள்





யாழ். செயலகத்தில் சிங்கக் கொடி



வெறிச்சோடிப்போயுள்ள யாழ். பஸ் நிலையம்




சுன்னாகம் நகரப் பகுதி





செயலிழந்துபோயிருக்கும் சாவகச்சேரி நகரப் பகுதி. மத்தியில் இராணுவத்தினர் ஏற்றிவைத்த சிங்கக் கொடி



யாழ்.பஸ் நிலையத்தினுள்ளே பாதுகாப்புப் படையினர்.

OUR PRODUCT RANGE

Konica

LAMIART

ANALOG/DIGITAL PHOTOCOPIERS

LAMINATORS
INDUSTRIAL LAMINATORS
HOT COATING MACHINES

GUILLOTINES
BOOK BINDERS
ROLL LAMINATORS

digiCOM

DIGITAL CALL MONITORS
PABX SYSTEMS
CORDLESS PHONES

SAMPO
FAX MACHINES

FUDEN
UPS

LUKSHMEE GROUP
&
REPROGRAPHICS (PVT) Ltd.

*Cordially Invite you*
*to grace the occasion of the*
*opening ceremony of*

LUKSHMEE AGENCY
(Authorized Dealer for Repro Graphics (Pvt) Ltd)

*Date: 5th (Thursday) February 2004*
*Time: 8.15 a.m - 9.00 a.m.*
*Place: 255, Stanley Road, Jaffna.*

LUKSHMEE AGENCY

(Authorized Dealer for Reprographics (Pvt) Ltd)
No:255, Stanley Road, Jaffna. T.P: 021-222 3776, 0777 - 635231

## உள்ளூராட்சி ஆணையர் நாளை வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.5

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் கே.து.விஜலட்சுமி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதரும் இவர் அன்று காலை 10 மணிக்கு யாழ் உள்ளூராட்சிமன்ற அலுவலகத்தில் மாவட்ட உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளர்களுடன் கலந்துரையாடவுள்ளார். (ஒ-7)

# மகனைக் கொன்ற தந்தையின் பிணை மனு நீதிமன்றில் நிராகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

தனது மகனையே கத்தியால் வெட்டிக் கொலைசெய்த சந்தேகநபரை பிணையில்செல்ல யாழ்.மேல் நீதி மன்றம் அனுமதி மறுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி மீசாலைப்பகுதியில் எஸ்.துஷிகாந்தன என்ற சிறுவன் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இறந்த சிறுவனுடைய தந்தை செல்லத்துரை லோகேந்திரன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி சட்டத்தரணி எஸ். ஏ.ஈ.ஏகநாதன் யாழ்.மேல் நீதி மன்றதில் பிணைமனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.இப்பிணைமனு தொடர்பான வழக்கு விசாரணைகள் கடந்த வாரம் மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி. எஸ். வரதராஜா முன்னிலையில் இடம்பெற்றன.

அரச சட்டத்தரணி செல்வி சுகந்து கந்தசாமியும் சந்தேகநபர் சார்பாக சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆகியோா மன்றில் ஆஜராகித் தமது வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர்.

இவற்றைச் செவிமடுத்த நீதிபதி, சந்தேகநபரை பிணையில் செல்லுவதற்கு அனுமதித்தால் வழக்கின் பிரதான சாட்சிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது. இதனால், வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்து பிணை மனுவை நிராகரித்தார். (ம-5)

## ச.ச.நிலையங்களுக்கான புதிய பதிவு இலக்கங்கள்

யாழ் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்குப் புதிய பதிவு இலக்கஙகளை பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் வழங்கவுள்ளது.யாழ். மாவட்டத்திலுள்ள பல சனசமூக நிலையங்கள் இயங்காமல் இருக்கின்றன. இவற்றின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காகவும், இலகுபடுத்தவும் பிராந்திய உள்ளூராட்சித திணைக்களம் புதிய பதிவு இலக்கங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தங்கள்பகுதிகளிலுள்ள சனசமூக நிலைய உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு புதியபதிவு இலக்கத்துக்குரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு சனசமூக நிலையத் தலைமை உத்தியோகத்தர் க.இராமச்சந்திரா கேட்டுள்ளார். (ஒ-7)


## எனது நன்றிகள்



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு அதற்கு அன்புடன் ஊக்கம் அளித்த அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் திரு. கபிலன் அவர்களுக்கும் கலங்கி நின்ற வேளையில் தொலைபேசி மூலம் ஊக்கம் தந்த சிங்கப்பூரில் இருக்கும் பெரியம்மாவிற்கும் மற்றும் தாத்தா, அப்பப்பா, அப்பம்மா, அப்பா, அம்மா உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி.

(28016)(35-16-17-12) பாஸ்கரன் நேமினி .

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி-33075)

உ

கரணவாய் வடக்கு நவிண்டில்
அருள்மிகு பூதவிநாயகர் (பூதவராயர்) ஆலய
**நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்**

கிரியைகள் ஆரம்பம்:- 05.02.2004 வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு
எண்ணெய்க்காப்பு:- பக்தர்கள் தைலாப்பியம் சாத்துதல்
08.02.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை
மஹா கும்பாபிஷேகம்:- 09.02.2004 திங்கட்கிழமை
நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதமகுரு
" குமர குரு மணி" சிவப்பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள்
(பிரதம குரு கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், பத்திர காளி ஆலயம், பொலிகண்டி)
ஆலயகுரு ச.ஜெகதீஸ்வரசர்மர நவிண்டில்
சர்வபோதகம்
சிவப்பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்
(பிரதம குரு புன்னாலைக்கட்டுவன்)
சிவப்பிரம்மஸ்ரீ சோ. உமாரமணக்குருக்களால்
விநாயகப்பெருமான் மீது பாடப்பட்ட ஒலிப்பேழை வெளியீடும் இடம்பெறும்
(28036) (36-11-12)

பூதவிநாயகர் கோவில்,
நவிண்டில்,கரவெட்டி.

இங்ஙனம்:
ஆலய திருப்பணிச் சபை.

## திருமண வாழ்த்து

மணமகன்
திருவளர் செல்வன்
நா. யோகதாசன்







மணமகள்
திருவளர் செல்வி
யோ. சியாமளா

இவர்கள் இருவரும் நல்லறமாம் இல்லறத்தில் இனிதே இணைந்து லண்டன் மாநகரில் வாழ்ந்து இன்று (05.02.2004) தைப்பூசத்தில் ஓராண்டு நிறைவைப் பூர்த்தியாக்கியுள்ளனர்.
இவர்கள் பல்லாண்டுகாலம் சகல செளபாக்கியங்களும் பெற்று மருதடி விநாயகர் திருவருளால் நீடுழி வாழ வேண்டுமென உளமார வாழ்த்துகின்றோம்.

மெமோறியல் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய் .

(28032)(35-16-12)

திரு.கா.நவரத்தினம்,
திருமதி நல்லம்மா,
குடும்பத்தினா.

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ!

## மங்களகரமான திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைமாதம் 22ஆம் நாள் (05. 02. 2004) வியாழக்கிழமை
காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்



எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற





**சிறி சிவாஞ்சனா நகையகம்**



என்னும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைக்க திருவருள் கை கூடியுள்ளதால் அத்தருணம்
எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அபிமானிகள், உறவினர்கள் அனைவரும்
விழாவுக்குச் சமுகமளித்து ஸ்தாபனத்தை வாழ்த்தியருளுமாறு
பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 - 222 5481

சிறி சிவாஞ்சனா நகையகம்

தங்கள் நல்வரை நாடும்:
திரு.திருமதி சி.சிவமூர்த்தி.
குடும்பத்தினர்.

*குறிப்பு:* இதுவரை நாளும் கஸ்தூரியார் வீதி, 118இல் 'அர்சனா' நகையகத்தை இயக்கிவந்த நாம் இன்றிலிருந்து கஸ்தூரியார் வீதி, 149ஆம் இலக்கக் கட்டடத்தில் 'ஸ்ரீசிவாஞ்சனா' நகையகம் என்ற புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். எங்களுடனான தொடர்பு 'ஸ்ரீசிவாஞ்சனா' நகையகத்தில்கொள்ளவும்.

(C/33062)(35-11-17-16-12)

# உதயன்

## தமிழரின் ஐக்கியம் வரலாற்றுக் கடமை

தெற்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இணைந்து உருவாக்கியுள்ள கூட்டமைப்பை 'இனவாதக் கட்சிகளின் புதிய கூட்டணி' என்று விமர்சித்துள்ள விடுதலைப் புலிகள், அது தொடர்பாக வெளியிட்டுள்ள கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

இந்த உத்தேச கூட்டமைப்பின் இரகசியத்திட்டம் என்னவென்பதை புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கம் கோடி காட்டியுள்ளது.

★ சமாதானப் பேச்சுக்களை உடனடியாக நிறுத்துவது.

★ யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உடன் இரத்துச் செய்வது.

★ சமாதான முயற்சிகள் தொடர்பான ஆவணங்களைச் சட்ட விரோதமாக்குவது.

★ நோர்வேயை அனுசரணைப் பணியிலிருந்து வெளியேற்றுவது.

★ தமிழ் இனத்தின் மீதான ஒட்டுமொத்தப் போருக்காக சிங்கள மக்களை அணி திரட்டுவது.

- இவையே இனவாதக் கட்சிகள் ஒன்று சேர்ந்து அமைத்துள்ள புதிய கூட்டணியின் இரகசிய செயற்றிட்டம் என்கிறது புலிகள் தரப்பு.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுவிஸில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றிலும் இதே போன்ற தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார்.

"இனவாதக் கூட்டு, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள், அமைதி முயற்சி மீதான விமர்சனம், நோர்வேக்கு எதிரான கண்டனம் போன்ற இனவாதச் செயற்பாடுகள் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகியுள்ளன." - என்று குறிப்பிட்டிருக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

கட்சி அரசியலால் பிரிந்து கிடந்த சிங்களப் பேரினவாதம், தமிழர்களுக்கு அவர்களது நியாயமான அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் உரிமைகள் கிடைத்து விடலாம் என்று அஞ்சி, அதைத் தடுக்கவும் -

பேரினவாத ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகத் தம்மை ஆட்சியில் அமர்த்தவும் -

ஒன்று திரண்டிருக்கின்றன என்று புலிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

ஜனநாயகத்தின் பெயரால் பேரினவாத ஆதிக்கத்தை நிலைநிறுத்த - தமிழர் மீது அதனைச் செலுத்த - தென்னிலங்கை தயாராகும் போது, முதலில் அதனை ஜனநாயக வழியில் எதிர்கொள்வதற்கு தமிழர் தரப்புத் தயாராக வேண்டும். இராணுவ ரீதியில் எல்லாவற்றையும் புலிகள் எதிர்கொள்வார்கள் என்று கூறிக்கொண்டு தமிழினம் சும்மா இருந்து விட முடியாது. தமிழர் ஒவ்வொருவரும் தத்தமது பங்களிப்பை உரிய முறையில் வழங்கியாக வேண்டும்.

சிங்களப் பேரினவாதத்தின் கொடூரப் பார்வை ஈழத் தமிழருக்கு எதிரானது மட்டுமல்ல; தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்குமே - அவர்கள் தென்பகுதி வாழ் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என்று அனைத்துத் தமிழருக்குமே - எதிரானதுதான். ஈழத் தமிழர்கள் இன்று இராணுவ வலிமையிலும் அரசியற் பலத்திலும் தெளிவாகக் காலூன்றி நிற்பதால், பேரினவாதத்தின் முதல் இலக்காக அவர்கள்தான் இருக்கின்றார்கள். காலப்போக்கில் தமிழ் பேசும் ஏனைய சமூகத்தினருக்கு எதிராகவும் பேரினவாதிகளின் பாய்ச்சல் வெளிப்படையாக முழு அளவில் விஸ்தரிக்கப்படும் என நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

எனவே, அணி திரளும் சிங்களப் பேரினவாதிகளின் ஆதிக்கத்துக்குள் சிக்கி, தமிழர்கள் தங்களின் தனித்துவத்தையும், கௌரவமான வாழ்க்கையையும், உரிமைகளையும் இழந்து விடாமல் சுதந்திரமாக வாழ்வதற்கு முதலில் அவர்கள் தங்களுக்குள் அணி திரள்வது அவசியம்.

வடக்கு - கிழக்கு, தெற்கு, மலையகம் என்று பேதம் பாராமல், ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் - இலக்கின் கீழ் - தமிழ்ப் பேசும் மக்கள் தங்களுக்குள் ஒன்று திரண்டால் மட்டுமே பெரும் பூதாகரமாக உருவெடுத்துவரும் சிங்களப் பேரினவாத ஆதிக்கத்திலிருந்து தங்களை - தங்களது தனித்துவத்தை - இருப்பை - காப்பாற்றிக் கொள்ள முடியும்.

இந்த ஐக்கியம் காலத்தின் கட்டாயம். குறுகிய அரசியல் லாப நோக்கங்களையும், தனிப்பட்ட குரோதங்களையும் துறந்து, இனம் சார்ந்த விசால நோக்கில் ஒன்றிணைவது தமிழ்ப் பேசும் மக்களின் தலைமைகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் வரலாற்றுக் கடமையாக மாறிவிட்டிருக்கின்றது.

இந்த ஐக்கியத்தின் வலுவுடன் பேரினவாதத்தை எதிர்கொள்வதே நமக்குப் பயன்தரக்கூடியதாகும். தமிழ்பேசும் மக்கள் தமது அரசியல் உட்பட்ட வாழ்வியல் உரிமைகளைப் பெறுவதற்கு அவர்களின் தலைமைகள் ஓர் அணி திரண்டு போராடுவது மட்டுமே ஒரே மார்க்கமாகும்.

---

**கொழும்பு - வவுனியா பஸ்களில்**

# வடபகுதி வரும் பயணிகளை மயக்கி திருடிய நபர் சிக்கிக் கொண்டார்!

ஊர்காவற்றுறை,பெப்.5

கொழும்பிலிருந்து வடபகுதி வரும் பஸ்களில் பயணிகளை மயக்கிப் பொருள்களை அபகரித்து வந்த நபர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

இது தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

சுன்னாகத்தைச் சேர்ந்த க.யசோதரன் என்பவர் வெளிநாட்டில் இருந்துவந்த தனது உறவினர் ஒருவரை கொழும்பிற்குச் சென்று சந்தித்தார். பின்னர் அவர் மீண்டும் தனது சொந்த ஊருக்கு திரும்புவதற்காக கொழும்பிலிருந்து வவுனியா செல்லும் பஸ்ஸில் இரவுவேளை பயணித்தார்.

பஸ்ஸில் இவரது இருக்கை அருகே இருந்த நபர் தன்னை மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். அத்துடன் சகஜமாகவும் பழகினார்.

பஸ் நொச்சியாகமத்தில் சிறிது நேரம் தரித்து நின்றது. அப்போது அந்த நபர் தேநீரகத்திற்குச் சென்று தேநீர் வாங்கி வந்து யாசேதரனுக்குக் கொடுத்தார். ஆனால், அவர் அதனை அருந்த மறுத்தார். நபர் சமயோசிதமாகப் பேசி யசோதரனை தேநீர் அருந்த வைத்துவிட்டார்.

மயக்கமருந்து கலந்திருந்த அந்தத் தேநீரை அருந்தியதால் யசோதரன் மயக்கமானார்.

பஸ் வவுனியா பஸ் நிலையத்தை வந்தடைந்தபோது மயங்கி இருந்த யசோதரன் பஸ்ஸை விட்டு இறங்கவில்லை. இதனால் சாரதியும், நடத்துநரும் அவர் மதுபோதையில் இருக்கிறார் என்று எண்ணி வவுனியா பஸ் நிலையத்தில் அவரை இறக்கிப் படுக்கவைத்து கிடத்திவிட்டுச் சென்றுவிட்டனர்.

மயக்கம் தெளிந்து அவர் எழுந்தபோது, தான் அநாதரவாக பஸ்நிலையத்தில் கிடப்பதை உணர்ந்தார். வெளிநாட்டிலிருந்து வந்தவர் கொடுத்த விலை உயர்ந்த பொருள்கள் இருந்த தனது பெட்டிகளும் அபகரிக்கப்பட்டிருப்பதை அறிந்தார். இது குறித்து வவுனியா பொலீஸ் நிலையத்திலும், புளியங்குளத்தில் விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியிலும் முறைப்பாடு செய்துவிட்டு ஊர்வந்து சேர்ந்தார்.

யசோதரன் சமீபத்தில் மீண்டும் கொழும்பு செல்ல நேரிட்டது. அவருடன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இ.அனோஜன், அனலைதீவைச் சேர்ந்த சி.கருணாகரன் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

கடந்த மாதம் 29ஆம் திகதி கொழும்பில் இருந்து அவர்கள் ஊர் திரும்புவதற்காக செல்லும் இரவு பஸ்ஸில் பயணமாகினர்.

அந்த பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த நெல்லியடியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவருடன் தனக்கு முன்னர் தேநீர் வாங்கிக் கொடுத்த நபர் அளவளாவிக் கொண்டிருந்ததை யசோதரன் அவதானித்தார். நண்பர்களுக்கு நிலைமையைத் தெரிவித்தார்.

வழமைபோன்று நொச்சியாகமத்தில் பஸ் தரித்து நின்றது. குறித்த நபர் இறங்கிச் சென்று தேநீரும், சிகரட்டும் வாங்கி வந்து வயோதிபருக்குக் கொடுத்தார்.

தேநீரை அருந்திய வயோதிபர் சற்று நேரத்தில் மயங்கிச் சாய்ந்தார். அவரது சட்டப்பையில் இருந்த 'பேர்ஸ்ஸை' குறிப்பிட்ட நபர் அபகரித்ததை மூவரும் அவதானித்தனர்.

உடனடியாக பஸ்ஸின் சாரதிக்கு நிலைமையை மூவரும் விளக்கினார்கள். பஸ் வவுனியா பொலீஸ் நிலையத்திற்குத் திருப்பப்பட்டது. அப்போது அந்த நபர் பஸ்ஸைவிட்டு இறங்க எத்தனித்தார். ஆனால், விடயமறிந்து தயாராக இருந்த பயணிகள் அந்த நபரை மடக்கி வவுனியா பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

எனினும், குறித்த நபர் வயோதிபர் மதுபோதையில் இருக்கிறார் என்று கூறியதுடன் வயோதிபரின் 'பேர்ஸை' முன்பே, பஸ்ஸினுள் வீசியிருந்ததால் போதிய ஆதாரமின்றி பொலீஸார் நடவடிக்கை எடுக்கப் பின்வாங்கினர்.

இறுதியில் பயணிகளின் வற்புறுத்தலால், வயோதிபர் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வைத்திய அறிக்கை பெறப்பட்டது. அதில் மயக்க மருந்தே கொடுக்கப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் யசோதரனும் தனக்கு முன்னர் நேர்ந்த கதி குறித்தும், அப்போது அங்கு செய்த முறைப்பாடு குறித்தும் கூறினார். இவற்றையடுத்துப் பொலீஸார் உண்மையை அறிந்து அந்த நபரைக் கைதுசெய்தனர்.

மேற்படி நபரைக் கைதுசெய்ய உதவிய யசோதரன் மற்றும் அவரது நண்பர்களிடம் பொலீஸார், புலிகளே இவ்வாறு சமயோசிதமாக நிலைமையைக்கையாளக் கூடியவர்கள் என்று கூறி அவர்கள் மூவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களா? என்று கேட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-16)

## மாநகரசபை வளாகக் காணி மீண்டும் பற்றைக் காடாகின்றது!

அரியாலை,பெப்.5

யாழ்.நகரில் மாநகரசபை வளாகம் அமைந்திருந்த காணி மீண்டும் பற்றைகள் வளர்ந்து புதர் மண்டிக் காணப்படுகின்றது.

மிக நீண்டகாலமாகக் கைவிடப்பட்டுக் கிடக்கும் இந்தக் காணியில் சிறிது காலத்துக்கு முன்பு படையினர் முகாம் அமைப்பதற்கு முயன்றது தெரிந்ததே. முகாம் நிறுவுவதற்கு வசதியாக இந்தக் காணியைச் சுற்றி படையினர் முட்கம்பிவேலி அமைத்து அதனை துப்புரவு செய்திருந்தனர். ஆனால், அங்கு முகாம் அமைப்பதற்கு எதிராகப் பொதுமக்கள் மத்தியிலிருந்து கடும்எதிர்ப்புக் கிளம்பியதால் அந்த முயற்சியைப் படையினர் பின்னர் கைவிட்டிருந்தனர்.

மாநகரசபைக்குச் சொந்தமான அந்தக் காணி தற்போது பராமரிப்பின்றி மீண்டும் பற்றைக்காடாக மாறிவருகிறது.(ஐ-17)

## தமிழர் தாயக மேம்பாட்டுக்கு நட்பு நகர இணைப்புத் திட்டம்

கிளிநொச்சி,பெப்.5

ஈழத்தமிழரின் கலை, கலாசார விழுமியங்களை சர்வதேச அரங்கில் எடுத்துக்கூறவும், கல்வி போன்ற துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தவும் வெளிநாடுகளின் நகரங்களையும் தமிழர் தாயக நகரங்களையும் நட்பு நகரங்களாக இணைக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதில் முதற்கட்டமாக நோர்வேயின் ரொம்ஸோ நகரை யாழ். நகருடன் நட்புறவு நகரமாக்குவது குறித்து அந்த நகர தலைவர் மற்றும் பிரதிநிதிகளுடன் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு நோர்வே சென்றுள்ள தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தலைமையிலான குழுவினரே இப்பேச்சில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியம்மிக்க நகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தை நோர்வேயின் ரொம்ஸோ நகருடன் நட்புறவு நகரம் ஆக்கவேண்டியதன் அவசியம் குறித்து இரு தரப்பினரும் ஆராய்ந்தனர் என்று கூறப்படுகிறது.

ரொம்ஸோ நகரின் சோஷலிச இடது சாரிக்கட்சிகளின் தலைவர் ஜேம்ஸ் றொபேட் தலைமையிலான குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களில் கணிசமான எண்ணிக்கையினர் நோர்வேயில் வசிக்கின்றனர். இந்த நிலையில் கலை, கலாசார ரீதியாக, மொழி, இன மேம்பாட்டு விருத்தியை முன்வைத்து நட்பு நகர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் கணிசமாகத் தங்கியுள்ள பிறநாடுகளிலும் நட்பு நகரங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று கூறப்படுகிறது. (ஒ-4)

**நாளை**

தை 23
வெள்ளிக்கிழமை
(06.02.2004)
திதி : பூரணை
பகல் 3.15 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
பின்னிரவு 4.18 வரை
பூரணை விரதம்
சுபநேரம்: 6.35 - 8.05
ராகுகாலம்: 11.05 -12.35
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

பண்பில்லாதவர்கள் மரத்திற்கு ஒப்பானவர்கள். படியாதவர்கள் விலங்கிற்கு ஒப்பானவர்கள்.

## சுகவனிதையர் கிளினிக்குகள் தென்மராட்சியில் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.5

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கான சுகவனிதையர் பரிசோதனை நிலையங்களை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

மீசாலை ஐயா கடையடியில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் கைதடி, வரணி, மிருசுவில் ஆகிய ஆஸ்பத்திரிகள் உசன், மீசாலை வடக்கு, மந்துவில் ஆகிய இடங்களில உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் இந்தப் பரிசோதனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு சலரோகம், இரத்த அழுத்தம், மார்புப் புற்றுநோய் கர்ப்பப்பை சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் ஆகியவை குறித்த பரிசோதனைகள் இந்த நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனை கிளினிக் இடம்பெறும் தினங்கள் அந்தந்தப் பிரிவு குடும்பநல சேவையாளர் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டு வருகிறன்றன.

இப் பரிசோதனைக் கிளினிக் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந் நோய்களினால் பாதிக்கப்பட்ட பல பெண்கள் பரிசோதனையில் கண்டு படிக்கப்பட்டு உரிய சிகிச்சையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## 2ஆம் லெப். யாழின்பனின் வித்துடல் விதைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.5

சுகவீனம் காரணமாக கடந்த முதலாம் திகதி சாவடைந்த மாவீரர் 2 ஆம் லெப்ரினன்ட் யாழின்பனின் (முத்தையா புஷ்பராசா - அராலி தெற்கு) வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமுன்தினம் விதைக்கப்பட்டது.

அன்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் வித்துடல் அராலியில் உள்ள அவரது வீட்டிலிருந்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்துக்கு எடுத்துவரப்பட்டது. அங்கு வீர வணக்கக் கூட்டமும் மலரஞ்சலியும் இடம்பெற்றன.

அராலி மத்தி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ரூபன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் பொதுச் சுடரைப் போராளி சுது ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை மாவீரரின் பெற்றோர் ஏற்றினர். அதனைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி, வலி.மேற்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் க.குலசிங்கம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினார்கள். இதனையடுத்து வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்து வரப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் விதைக்கப்பட்டது. (ஒ-10)

## வறுமை நிவாரணம் மற்றும் சமுர்த்தி திணைக்களங்கள் இணைப்பு

வட்டுக்கோட்டை,பெப்.5

சமுர்த்தி அமைச்சின் கீழ் இரு பிரத்தியேக திணைக்களங்களாகச் செயற்பட்டுவந்த வறுமை நிவாரணத் திணைக்களம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் முதலாம் திகதியிலிருந்து இந்த இணைப்பு நடைமுறைக்கு வந்துள்ளது.

பத்திரமுல்ல 'செத்சிரிபாய' 3 ஆம் மாடியில் இயங்கிய சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களமும், வறுமை நிவாரணத் திணைக்களமும் இலக்கம் 17, பானஸ் பிளேஸ், கொழும்பு 07, என்ற முகவரியில் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் என்ற பெயரில் இயங்கிவருகின்றன.

இதற்கான சுற்றுநிருபம் அமைச்சுச் செயலகங்கள், மாவட்டச செயலகங்கள், பிரதேச செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஒ-161)

# 8 ஆவது நிறுவன தின

## 05-02-2

# INSTITUTE OF INFORM

Jaffna, Sri Lan

## "A CENTRE OF EXCELLENCE IN GLOBAL IN

### அருளாசிச்செய்தி



அன்புசால் பெருந்தகையீர்,

தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது தனது 8ஆவது வருட சேவையினை நிறைவுசெய்து ஒன்பதாவது அகவையினுள் காலடி எடுத்துவைப்பதையிட்டு பெருமகிழ்ச் சியடைகின்றோம்.

இந்த நிறுவனம் காலத்தின் தேவையறிந்து யாழ்ப்பாண மக்களின் கணனிக் கல்வித் தேவையினை தனித்துவமிக்க முறையில் பூர்த்தி செய்து வருவது கண்கூடு. ஆங்கில மொழிக்கு அடுத்தபடியாக கணனியியலில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்ற மொழியாக தமிழ்மொழி அமைந்திருப்பது பெருமைக்கு[illegible] விடயம்.

இவ்வகையில் இலங்கைத் தமிழ்மக்களுடைய பங்கு அண்மைக்காலமாக கணனிசம்பந்தப்பட்ட விடயங்களில் அதிகரித்துவருவது பாராட்டுக்குரியது. இதற்கு ஐ.ஐ.எஸ் போன்ற கணனி நிலையங்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த நிறுவனமானது இன்னும் பல்லாண்டு காலம் செயற்பட்டு கணனியியலில் புரட்சிமிக்கதாகத் திகழவும். இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றும் இயக்குநர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கவும் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

### யாழ். ஆயரின் வாழ்த்துச் செய்தி



ஐ.ஐ.எஸ் நிறுவனத்தினரின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்விற்கு எமது வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வடபகுதி மாணவர்களின் கல்விப் பாரம்பரியத்தில் கணனிக் கல்வியை வளரச் செய்வதற்கு ஐ.ஐ.எஸ். நிறுவனத்தினர் உறுதியாக நின்று ஆற்றிய பணி அளப்பரியது பாராட்டுதற்குரியது.

இன்று நாம் வாழும் யுகம் ஒரு கணனியுகம் அனைத்துமே கணனிமயமாய் உள்ளது. இன்று எதற்கும் கணனி தேவையாயிருக்கிறது. கடந்த கால பேரர் அனுபவங்களால் இக்கல்வியின் வளர்ச்சி வடபகுதியில் பெரிதும் தடைப்பட்டாலும் இப்போது வடபகுதியில் மிக வேகமாக வளர்ந்து வருவது மகிழ்ச்சி தருகின்றது. இதற்கான பங்களிப்பின் பெரும் பகுதியை ஐ.ஐ.எஸ் நிறுவனத்தினர் ஆற்றியுள்ளனர் என்றால் அதில் தவறிருக்க முடியாது.

ஐ.ஐ.எஸ் நிறுவனத்தினரின் முகாமையாளர் கே.விக்னேஸ் அவர்களையும் நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரையும் வாழ்த்தி எம் மண்ணிற்கு இப்போது மிகவும் அவசியம் தேவையாயுள்ள இப்பணியினை இன்னும் உறுதியாகத் தொடரும்படி வாழ்த்துகின்றோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்ஆண்டகை
யாழ். ஆயர்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### IIS will be able to produce world class ICT professionals

We are indeed delighted to be in association with IIS as our partner in Jaffna to offer BTEC VocationalQualifications. Today. IIS has reached another milestone. by receiving the accreditation to offer BTEC Higher. National Diplomas (HNDS) by Edexcel International. UK for the first time in Jaffna . with the launching of the BTEC Qualifications. IIS will conduct three Higher National Diplomas' in ICT namely HND Computing. HND Software Engineering and HAND Business Information Technology by opening up many career opportunities for the students in Jaffna. These diplomas will lead into final year degree programme offered by over 100 universities in the UK. USA. Canada and Australia. With the dedicated faculty and quality mechanisms in place, we are confident that IIS will be able to produce world class ICT professionals to face challenges in the new economy.

Edexcel would like to congratulate IIS for launching the BTEC HND programme and we assure you of our continuous support and commitment at all times.

Prasantha Fernando
Edexcel International Country Manager (Sri Lanka. Maldives & Mauritius)

### The Pioneering efforts of the IIS in IT

I am pleased to send this message on the occasion of the 08th Institution day of the Institute of Informatics Studies, popularly known as IIS. When Mr.Kularatnam Vignesh took up the challenge 08 years ago to set up this Institute his vision provide the students of Jaffna the opportunity to become IT professionals. It was a pioneering effort and today we see the results of his hard work.

I understand that today we have the highest number of students passing out.

Institute of Informatics Studies was the first center in jaffna to introduce classes for the Bachelor of Information Technology. (BIT)

This is indeed culmination of the efforts of the past years and the proof of the success of those efforts.

I wish IIS all success.

David Dominic.
Executive Director,
Association of Computer Training Organisations (ACTOS)

"கணனி அ
தகவல்
எம்மை

பயிற்சி நெறிகளைக் முடிந்
எமது சகோதர, ச

கணனி உலகின்
இன்றுவரை கரைச
ஆளுநர் சபையில்
கொண்டிருக்கும் எ
சமர்ப்பணம்.

சிறப்பிதழ்

### IIS இன் அளப்பரிய பணி வாழ்க

யாழ்ப்பாண மாவட்ட தகவல் தொழில்நுட்ப அறிவியல் துறையில் பெரும் பங்கு ஆற்றிவரும் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (IIS) 8ஆவது ஆண்டு பூர்த்தியாவது தொடர்பில் எனது வாழ்த்துச் செய்தியினை தெரிவித்துக் கொள்வதில் பேருவகை அடைகின்றேன்.

இந்நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டு இன்று வரை யாழ். மாவட்ட தவகல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கென தன்னை அர்ப்பணித்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவினையூட்டியுள்ளதுடன் சர்வதேச தரம் மிக்க சான்றிதழ்களை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது.

மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பீடத்தினால் நடத்தப்படுகின்ற தகவல் தொழில்நுட்பமாணி பட்டப்படிப்பினை எமது பிரதேச இளைஞர்களுக்கு வழங்கி வருகின்றமை அனைவரும் அறிந்த ஒன்று என்பதுடன் இலங்கையின் கணனிப்புலத்தின் தலைசிறந்த நிறுவனங்களுடன் இணைந்து முறையான பாடத்திட்டத்தின் கீழ் பல்வகையான பயிற்சி நெறிகளை வடிவமைத்து அவரவர் தேவைக்கேற்ற முறையில் வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனமும் இதன் நிர்வாக இயக்குநர் திரு.விக்னேஷ் அவர்களும் மற்றும் ஏனைய விரிவுரையாளர்களும் இன்னும் பல ஆண்டுகள் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமது கல்விப் பணியினைத் தொடர வாழ்த்துகின்றேன்.

திரு.ப.விக்னேஸ்வரன்.
வலயக் கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்..


# ன விழாச் சிறப்பிதழ்

## 2-2004


## ORMATICS STUDIES

Lanka.


AL INFORMATION TECHNOLOGY"




ரி அரியாசனத்தில் இருத்தி, இவள்
கவல் தொழில்நுட்ப உலகோடு
மை சரியாசனம் வைத்த தாய்"



ளைக் முடிந்துக்கொண்டு இன்று சன்றிதழ்களையும், விசேட விருதுகளையும் பெற இருக்கும்
சகோதர, சகோதரிகளுக்கு மாணவர் மன்றத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்ளுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



லகின் கலங்கரைவிளக்காக யாழ். தீபகற்பத்தில் நிறுவப்பட்டு
ர கரைகாணமுடியாத கணனிக்கடலாகவும், சர்வதேச EDEXCEL
சபையினால் அங்கீகரிக்கப்பட்டு பட்டப்படிப்பை வழங்கிக்
க்கும் எமது நிறுவனத் தாய்யின் 9ஆவது அகவைக்கு இவ்விதழ்
ம்.



தழ் அமைப்பு மாணவர் மன்றம், IIS

இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை

ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**N.A.லொட்ஜ்,**

ரூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி,
நியூலலிதா ஜுவல்லறி, இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை)

(28017)(11-18-26)


# நன்றி கூறுகின்றோம்.

வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்திற்கு காப்பாளர் விடுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு உதவிய இந்துகலாசார அமைச்சர் மாண்புமிகு

## தியாகராசா மகேஸ்வரன்

அவர்களுக்கு நாம் நன்றி கூறுவதோடு மேலும், அவர் எமது தமிழினத்திற்கு பல்வேறுபட்ட சேவைகள் ஆற்றுவதற்கு ஆண்டவன் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.* (28065) (26-11-18)

**- வாழ்வக சமூகம்.**

# இலங்கைச் சட்டக்கல்லூரி நுழைவுப் பரீட்சை - 2004

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக சட்டமாணவர் இந்து மகாசபை ஏற்பாடு செய்துள்ள வழிகாட்டல் வகுப்புகள் நாளை மறுதினம் (07.02.2004) சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

**நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை**
**இடம்: "உதயன் நிறுவன கேட்போர் கூடம்"**

குறிப்பு:- சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவையான ஆகக் குறைந்த கல்வித் தகைமை :

க.பொ.த. (உ/த) பரீட்சையில்
(ஒரே அமர்வில் அவசியம்)
புதிய பாடத்திட்டமாயின் 3 S
பழைய பாடத்திட்டமாயின் 4 S

அத்துடன்

க.பொ.த. (சா/த) பரீட்சையில்
(ஒரே அமர்வில் அவசியமில்லை)
தமிழ் - C
ஆங்கிலம் - C

(28054)(18-11-26) **- ஏற்பாட்டாளர்கள்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 27 | | 06 |
| - | | - |
| 03 | | 01 |
| - | | - |
| 1924 | | 2004 |



## அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற கட்டடப் பொறியியலாளர், முன்னாள் பொருளாளர், திருப்பணிச்சபை - காரைநகர் சிவன்கோயில்)

**அம்மம்மா நன்றாக வமைந்தென்ற சொற்கேட்டு**
**விம்மிதராய் மெய்யின் மயிர் மிகப் பொடிப்ப விம்மி விம்மி**
**அம்மையப்பா வென்றரற்றி யானந்தக் கண்ணீர் விட்**
**டிம்மையிலே பயன் பெற்றே னென்று சிவபதமடைந்தார்**

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்சடங்கில் கலந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் யாவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கிறோம்.

'லட்சுமி பதி', நடுத்தெரு,
காரைநகர். (C/33108)(11-18-26)

**மனைவி, சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# தைப்பூச உற்சவங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.5

நல்லூராக் கந்தசுவாமி கோயிலில தைப்பூசத்தையொட்டி இன்று மாலை 4.30மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெற்று முருகப் பெருமான் மஞ்சத தில் வீதியுலா வருவார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.5

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இன்று பூசைகள் இடம் பெற்று நண்பகல் 12மணியளவில் முருகப்பெருமான் இடபவாகனத்தில் வீதியுலா வருவார். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.5

தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலயத்தில் இன்று காலை பூசைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருவார்.

காலை 8.30மணிக்கு துர்க்கா தோட்டம் யாத்திரிகர் மண்டபத்தை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைக்கவுள்ளார். பாலகர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப்.5

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இன்று பூசைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

இணுவில் கந்தசுவாமி கோயிலில் இன்று முற்பகல் சங்காபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூசைகள் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு சண்முக அர்ச்சனை நடைபெற்று 7 மணிக்கு முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக திருமஞ்சத்தில் வீதியுலா வருவார். (ஒ-10)

★ ★ ★

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய தைப்பூசத் திருவிழாவில் இன்று காலை 9 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று இறைவன் வீதியுலா வருவார். (ஒ-10-150)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ் கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் இன்று காலை 10 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் தேவாரப் பண்ணிசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். (ஒ-10)

# சமய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.5

சாவகச்சேரி வாசிவனேஸ்வரி ஆலய மாககும்பாபிஷேகம் இன்று காலை 7 மணிதொடக்கம் 8 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

நெல்லியடி கிழக்கு புதுத்தோட்ட விநாயகர் ஆலய மணிக்கூட்டுக் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு தைப்பூச தினமான இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் சிறப்புவிருந்தினராக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பொ. சிவபாதமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலய இராஜகோபுர நிர்மாண ஆரம்பவிழா தைப்பூச தினமான இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

வடமராட்சி,பெப்.5

தென்புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் ஆலய மணிக்கூட்டுக் கோபுரத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. (ஒ-10-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்துக்குப் புதிய சித்திரத தேர் அமைப்பதற்கான அச்சுகள பூட்டும் வைபவம் இன்று முற்பகல் 10 மணியளவில் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.5

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குரு பீடத்தில் தைப்பூச தினமான இன்று காலை 9 மணிக்கு தேவார பண்ணிசை வகுப்புகள் ஆரம்பமாகும்.10 மணியளவில் வேதாந்த வகுப்புகள் நடைபெறும். (ஒ-10)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதியாகக் கடமையாற்றுகின்றவரான திருமதி J.விஜயராணி
அவர்களின் அன்புத் தந்தை

## பொன்னையா தம்பிப்பிள்ளை

அவர்கள் (04.02.2004) இயற்கையெய்தியதையிட்டு நாம் மிகவும் கவலைப்படுகின்றோம். இவரது மறைவால் துயரில் ஆழ்ந்திருக்கின்ற குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ். அ. பொ. வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (28066)

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.**

(26-11-18)

# அவசர கலந்துரையாடல்

தென்மராட்சி தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள், நடத்துநர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை (2004.02.06) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு *சங்கத்தானை வீஞ்ஞானக் கல்லூரியில்* நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சியைச் சேர்ந்த அனைத்துக் கல்விநிலைய, பிரத்தியேக வகுப்பு இயக்குநர்கள், நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

தென்மராட்சி.
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.
(C/33107)(26-11-18)

**சி.கோகுலன்,**
செயலாளர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1927 | | 2004 |
| - | | - |
| 03 | | 01 |
| - | | - |
| 05 | | 06 |



## திருமதி பரிமளம் இராசையா

திதி: 05-02-2004

நாள் எல்லாம் நாம் உயர நீ உழைத்தாய்!
அம்மா! சீரான வாழ்வு பெற வழிவகுத்தாய்!
பாசத்தின் முழுஉருவே! அன்பின் ஒளிவிளக்கே!
மனங்களில் மறையா மாணிக்கமே -
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.* (28062) (26-11-18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சீவரட்ணம் செல்லப்பாக்கியம்

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் கண்டாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சீவரட்ணம் செல்லப்பாக்கியம் 03.02.2004 செவ்வாய்க்கிழமை கண்டாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூமணி, தங்கராசா (கிராம சேவையாளர்) மற்றும் இராசரத்தினம், தருமராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, சண்முகராஜா, ராஜேஸ்வரி, விக்னராஜா, சிவராஜா, பத்மராஜா, சிங்கராஜா, பாக்கியராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கண்டாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கெருடாவில் தெற்கு,*
*தொண்டமனாறு.* (28052)(39-18-11)

தகவல்:
திருமதி விக்னராஜா,
T.P.: **0014169959539.**

## வேலுப்பிள்ளை இரத்தினசோதி

(கோவளம் - காரைநகர்)

கோவளம், காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரான வே.இரத்தினசோதி அவர்கள் 03.02.2004 செவ்வாய்க்கிழமை நாவலப்பிட்டியில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் கருங்காலியைச் சேர்ந்த சிவசம்பு - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் திலகவதி அவர்களின் அன்புக கணவரும் நிறைஞ்சனா, முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரஞ்சோதி, சிவசோதி, செகசோதி (ஞானசோதி), அருட்சோதி ஆகியோரின் அருமைச் சகோதரரும் தவமணி, சரஸ்வதி, தனலட்சுமி, புஸ்பராணி, சிவபாதசுந்தரம், சிவமணி, பாலேந்திரா, புஸ்பவதி, கலாதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்னபாக்கியம், ஏரம்பு, இந்திராணி, செல்வரத்தினம், ரஞ்சினி ஆகியோரின் சகலனும் நந்தகுமார், இரத்தினகுமார், இராசேந்திரன், இரவீந்திரன், பாலேந்திரன், நந்தினி, ஞானகுமார், சாந்தினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை நாவலப்பிட்டியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோவளம், காரைநகர்,*
T.P.: 0542240317 *(நாவலப்பிட்டி)*
(C/33109) (26-11-18)

தகவல்:
குமாரசாமி குமாரதேவன்
(மைத்துனர்).

# சிறுமிகள் மீதான வல்லுறவுச் சம்பவம் யாழ். குடாநாட்டில் அதிகரிக்கின்றது!

## 3 வருடங்களில் 20 இற்கும் மேற்பட்ட வழக்குகள்

யாழ்ப்பாணம்,பெப்.5

குடாநாட்டில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வகையில் பாதிக்கப்பட்ட 20 இற்கும் மேற்பட்ட சிறுமிகள் தொடர்பான வழக்குகள் மேல்நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. இதைவிட இதுபோன்ற பல வழக்குகள் ஏனைய நீதிவான் நீதிமன்றங்களிலும் விசாரணையில் உள்ளன.

மேல் நீதிமன்றத்தில் இத்தகைய வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பல வழக்குகளில் ஆச்சரியமூட்டும் சம்பவங்கள் பற்றித் தெரிய வந்துள்ளன.

வழக்கு ஒன்றில் தொடர்புபட்ட சிறுமி வெளிநாட்டில் திருமணம் செய்துவிட்டார் என்று புகைப்படங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனால், சம்பந்தப்பட்ட வழக்குகளைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலை ஏற்படுவதுடன், எதிரிகள் விடுதலையும் ஆகிவிடுகின்றார்கள்.

இத்தகைய வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கமுடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தகைய குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர் 20 வருட சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனக் கூறப்பட்டது. (ம-3-5)

### நாவாந்துறை பங்கு மக்களால்

# திருப்பாடுகளின் காட்சி ஏப்ரலில் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.5

நாவாந்துறை பங்கு மக்களால் மேடையேற்றப்படவுள்ள 'கல்வாரி கண்ட கடவுள்' என்னும் திருப்பாடுகளின் காட்சிக்கான அங்குரார்ப்பண அருள்பொலிவு நிகழ்ச்சிகள் கடந்த ஞாயிறன்று காலை நடைபெற்றன. பங்குத்தந்தை எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் காலைத்திருப்பலியின் போது இதனை நிறைவுசெய்தார்.

'கல்வாரி கண்ட கடவுள்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3ஆம், 4ஆம், சனி, ஞாயிறு தினங்களில் நவீன அரங்க உத்திகளுடன் மேடையேற்றப்படவுள்ளது. (ஐ)

# இந்திய மீனவர் படகோட்டிகள் மீது வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர் படகோட்டிகள் 44 பேர் மீது யாழ். மேல் நதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடித்துக் கொண்டிருந்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 60 இந்திய மீனவப் படகோட்டிகள் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 படகோட்டிகளுக்கு எதிராக யாழ். மேல்நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ளவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய வசதியாக, அவர்கள் தொடர்பான விவரங்களை அனுப்பும்படி சட்டமா அதிபர் திணைக்களம் அரச சட்டவாதியான செல்வி சுகந்தி கந்தசாமியைக் கேட்டுள்ளது. இதனையடுத்து, மீனவர்கள் தொடர்பான விவரங்களை அவர் சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளார். (ம-3)

# நற்காரியங்கள் நிகழ்த்த உகந்த நாள் தைப்பூசம்

**இன்று தைப்பூசத் திருநாள். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

**சைவ** வாழ்வில் சிவ தத்துவம முதன்மையானது. சிவலிங்கத் திருமேனியரான சிவபெருமான் சிவாலயங்களின் மூலஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். அம்பாள், அம்பாள் சந்நிதியில உள்ளார். எல்லா ஆலயங்களிலும் சபை என ஒரு மண்டபம் மகா மண்டபத்துடன் உள்ளது. அதிலே, மூல மூர்த்தியின் எழுந்தருளி மூர்த்தி உள்ளமையை நாம் காணலாம். ஆனால், சிவாலயங்களில் இந்த மண்டபத்திலே சிவசக்தி வடிவாக ஸ்ரீ நடராஜரும் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாளும் கொலு வீற்றிருப்பதை நாம் காணலாம். தில்லைத் திருப்பதியில் 5 சபைகள் உள.

ஸ்ரீநடராஜர் புரிவது என்ன? ஆம்! அவர் ஆனந்த நடனம் ஆடுகின்றார். சிறந்த திருநடனம் மூலம் அவர் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் புரிகின்றார். இதனால் இவரைப் பஞ்சகிருத்திய நாயகர் எனக் கூறுவர். இவைகளைச் சைவ சித்தாந்த வடிவில் நாம் பார்த்தால் உடுக்கை ஏந்திய கரம் மாயாமல நீக்கத்தைக் கூறும். அக்கினிக்கை கன்மமல நீக்கம ஆகும். ஊன்றிய திருவடி ஆணவமல நீக்கம் எனப்படும். தூக்கிய திருவடியாகிய குஞ்சிதம் அருளை உணர்த்தும். அபயகரம் பேரின்ப நிலையைக் காட்டும். எனவே, ஆனந்தநடனம் ஆன்மாக்களின் வழி நடத்தலைக் குறிப்பதாகும்.

தை மாதம் ஒரு தலைசிறந்த மாதம் ஆகும். சூரிய பகவான் நற்பார்வையால் நற்கருமங்கள் நன்றே நடந்தேறுகின்றன. தை மாதத்திற்கான நட்சத்திரம் பூசம் ஆகும். வடமொழியில் தை மாதத்திற்கு புஷ்ய மாதம் என்பர். ஆகவே, புஷ்ய மாத புஷ்ய நட்சத்திரம் சிறப்படைகின்றது. இது சிவ விரத நாள். இதனால் விசேடமாக எல்லாச் சிவாலயங்களிலும் சிறப்பு அபிஷேகம் நடத்துவர். சிவ விரதம் என்பதால் எல்லாச் சைவ ஆலயங்களிலும் விஷேட அபிஷேகம், பூஜை என்பன நடைபெறும்.

**சமூகஜோதி**
**கா.கணேசதாசன்**

தை மாத பூச நட்சத்திரத்தன்று பஞ்ச கிருத்தியநாயகனான ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருநடனம் நிகழ்ந்தது. தை த தை என்ற லயத்துக்கேற்ப அவர் திருநடனம் புரிந்தார். அம்பாள் அருகேயிருந்து இரசித்தாள். அப்போது துந்துபி, பேரிகை, மத்தளம், உடுக்கு எல்லாமே ஒலித்தன. வேதம் முழங்கிற்று. கீதம், நாதம், இசை ஒலிகள் எல்லாமே ஒலித்தன. நடனத்துக்கு இசைத்தன. இதுவே, ஆனந்த அற்புத நடனம்.

வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர், பிரம்மா, விஷ்ணு, தில்லை மூவாயிரம், அடியார்கள் எல்லாருமே இந்தத் திவ்விய நடனத்தைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் மல்கினர். மெய சிலிர்க்க மெய்ம்மறந்து ஸ்ரீநடராஜ சிந்தையுடன் இருந்தனர்.

பதஞ்சலி முனிவர் அப்போது ஸ்ரீ நடராஜப்பெருமானை வழிபட்டு "எம்பெருமானே தைப்பூசத் திருநாளாகிய இன்று தாங்கள் ஸ்ரீ சிவகாமி அம்பாளுடன் எமக்குக் காட்சி கொடுத்தீர்கள். இந்நடனத்தை எல்லோரும் எப்போதும் பார்க்கவேண்டும்; அந்த அற்புத நடனத்தை ரசிக்கவேண்டும். இதனால், அவர்கள் ஈடில்லாப் பெருவாழ்வு வாழ வகை செய்து அருளுக" என வேண்டினார். அதனால், தைப்பூச நடன நாயகராக ஸ்ரீ நடராஜர் எழுந்தருகின்றார். தைப்பூசத் திருநாள் பௌர்ணமியுடன் கூடி வருவது மேலானது. அன்று முழுமதி நாள். நிறைந்த நன்னாள். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தமது பூம்பாவைப் பதிகத்தில் தைப் பூசச் சிறப்பினை இவ்வாறு கூறுகின்றார்.

*"மைம் பூச மொண்கண மட*
*நல்லார் மாமயிலைக்*
*கைப் பூசு நின்றான் கபாலீச்சரம்*
*அமர்ந்தான்*
*நெய்ப் பூசு மொண் புழுக்கல் நேரி*
*ழையார் கொண்டாடும்*
*தைப் பூசங் காணாதே போதியோ*
*பூம்பாவாய்"*

தைப் பூச நாள் சிறந்தது. இப்புண்ணிய நாளில் பல ஆலயங்களில் மஹாகும்பாபிஷேகங்கள் நிகழ்ந்துள்ளன; நிகழ்ந்தும் வருகின்றன. தைப்பூசத் திருநாள் கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர தேவஸ்தான மணவாளக்கோல நன்னாள். அன்று அங்கு சுவாமிக்கு 1008, அம்பாளுக்கு 1008 சங்கு அபிஷேகம், எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன நிகழ்ந்து வருகின்றன. தைப்பூசம் முருகபக்தர்களுக்கும் உரிய நாள். அறுபடை வீட்டு யாத்திரைக் காலமும் இதுவாகும். இதனால், விரத அனுட்டானங்களோடு முருகப் பெருமானை வழிபடுதல் மேலானது. ஆனந்தநடன தரிசனத்தால் எல்லோரும் நல்வாழ்வு வாழ்வார்களாக!

# கல்வியில் வல்லமைபெற தைப்பூசம் வழிவகுக்கும்

தை மாதத்தில் வரும் பூச நட்சத்திர நாள், ஒரு புண்ணிய நாளாக இந்துக்களால் கொண்டாடப்படுகிறது. இத்தைப்பூச நாள் பெரும்பாலும் பூரண நாளாகவே இருக்கும். இந்துக்கள் இத்தினத்தை ஒரு புண்ணிய நாளாகவும, புனிதநாளாகவும் கருதி, கோயில்களில் விழா எடுத்து பக்தி பரவசமாகப் பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதனை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

"தைபூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என திருஞானசம்பந்தர் என்பைப் பெண்ணாக்கிய பூம்பாவைப் பதிகத்தில்' அருளிச் செய்தார். இவ்வாறு திருமுறைகளிலும், திருவிடை மருதார்ப் புராணம், பழனித் தலபுராணம் முதலியவற்றிலும் தைப்பூச விழா சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இருபத்தேழு நாண் மீனகளுள் எட்டாவதாகக் கூறப்படுவது பூச நாண் மீனாகும.

இந்தப் பூசத் திருநாள் முழுநிலவு நாளில் கூடி வரும மாதம் தையாகும். தேவர்களின் குருவாகிய வியாழன் பூச நாண் மீனின் அதிதேவதையாகும. வியாழன் அறிவினை உண்டாக்கும் வல்லபம் உடையவன் எனச் சோதிடர் நூலார் கூறுவதால் பூச நாண மீனை வழிபட்டால் வியாழனின் அருள் கிடைக்கும். கல்வியில் வல்லமை பெற ஏதுவாக இருக்கும் எனக் கருதி இன்றைய வழிபாடு முக்கியம் பெறுகின்றது.

**ச.பிரியா - சாவகச்சேரி**

தைப்பூச விழாவைச் சிவன் கோயில்களிலும் முருகன் கோயில்களிலும் பத்து நாள்கள் சிறப்பாகக் கொண்டாடிப் பூச நன்னாளில் புண்ணிய ஆறுகளில் நீராடி விழாச்செயது, நிறைவு செய்வார்கள். எனவே, இந்துக்களாகிய நாம் இப்புண்ணிய நாளாகிய பூசநாளில் இறைவனைப் பிரார்த்தனை செய்து பயனடைவோமாக!

# வாசகர் திருமுகம்

## ஓய்வூதிய ஆவணங்கள் தமிழில் வரவேண்டும்

இலங்கை ஒன்பது மாகாணங்களைக் கொண்ட நாடாகும். இதில் வடக்கும் கிழக்கும் தமிழ்மொழி பேசுவோரையும் அதே மொழியில் அரசகருமங்களில் தொடர்புகளைக் கொள்வோரையும் கொண்டதாகும்.

ஆனால், இப்பகுதிகளில் கடமையாற்றும் அரச உயர் அதிகாரிகளும் அவர்களின் திணைக்களங்களும் சகல கடிதத் தொடர்புகளையும் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் அனுப்பிப் பதில் பெறுவதில் கருத்தாக செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக, தமிழில் தொடர்புகொள்ளப்படும் விடயங்களில் குறைபாடுகள இருந்தால் அதுசார்பான திருத்தத்தைச் செய்து அனுப்புமாறு சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் மட்டும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

ஓய்வூதியக் கணிப்பீடு சம்பந்தமாக யாழ். செயலகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பிற்கு வருகை அளித்த அதிகாரிகள் அனைவரும் சிங்கள மொழியில் மாத்திரமே விரிவுரை நிகழ்த்தினார்கள். கொழும்பு ஓய்வூதிய திணைக்களத்துள் பணிபுரியும் சுமார் 350 - 400 பணியாளர்களும் அதிகாரிகளும் சிங்கள மொழியில் மாத்திரம் செயற்படுபவர்களாக உள்ளார்கள். ஆங்கிலத்தில் தமிழ்மொழியில் ஓய்வூதியப் படிவத்தை நிரப்பி அனுப்பியவர்களுக்கு அதிலுள்ள குறைபாடுகளை நீக்கி அனுப்பிவைக்குமாறு தனிச்சிங்களத்தில் அச்சிடப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. இக்கடிதத்தில் இலலாத விடயங்கள் சிங்களத்தில் எவராலும் இலகுவில் வாசித்து விளங்க முடியாத கிறுகல் எழுத்தில் இரண்டு மூன்று வரிகளில் எழுதி அனுப்பி வைக்கப்படுகின்றன.

சிங்கள மொழியை வாசித்து விளங்கிக்கொள்ள முடியாதவர்கள் கடிதத்துடன சிங்களம் வாசிக்கக்கூடியவரைத் தேடி அலைந்தும் அதிலுள்ள விடயத்தைப் புரிந்தவர் அவரைத் தேடிப்போனவரது முகத்தை, முகத்தைப் பார்க்கின்றாரே தவிர அவரால் அவரைத் தேடிப் போனவருக்கு விடயத்தை கூறவோ அவர் விளங்கிக்கொள்ளவோ முடியாமல் தத்தளிக்கும் நிலையே ஏற்படுகின்றது.

எனவே, எவரெவர் எம்மொழியில் தொடர்புகொள்ளுகின்றாரோ அந்த மொழிகளில் தொடர்புகள் உருவாகினால் இலகுவாகவும் தாமதமின்றியும் செயற்படமுடியும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டால் இலங்கையின் இனப்பிரச்சினையில் பெரும்பகுதி தானாகவே தீர்ந்துவிடும். எந்தத் திணைக்களத்திலும் தமிழில் தொடர்புகொள்ளும் பகுதியும் கட்டாயமாக அமையவேண்டும.

*நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.* **க.திருச்சிற்றம்பலம்.**

## மாசி மகம், சங்கடஹர சதுர்த்தி விரத நாள்கள் விவரத்தில் முரண்பாடு

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் தவிர்ந்த யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் வெளிவரும் சகல பஞ்சாங்க கணிப்புக்களிலும் மாசி மகம் - மஹாமகம் 06.03.04 சனிக்கிழமை என்று சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நேர இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் மட்டும் மாசி மகம் 05.03.04 வெள்ளிக்கிழமை என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் வெளிவந்த இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கங்களிலேயே இப்பிழையை நிரூபிக்க ஆதாரங்கள் உள்ளன. 1935/36 யுவ வருட, 1962/63 சுபகிருது வருட இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கங்களில் மாசி மகம் குறிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில், இவ்வருடம் மாசி மகம் - மஹாமகம 06.03.04 சனிக்கிழமையே வரும். இப்பழைய பஞ்சாங்கங்களையும், யாழ்ப்பாணத்திலும்தமிழகத்திலும்வெளிவரும் ஏனைய பஞ்சாங்கக் கணிப்புக்களையும் பார்த்து மாசி மகம் - மஹாமகம் 06-03-04 சனிக்கிழமை, என்பது பிழைஎன்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் அறிவிப்பார்களா?

மாசி மகத்தன்று மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலில் தேரும், வேறு பல ஆலயங்களில் தீர்த்தமும் நடக்கவிருப்பதால் உடனடியாகப் பிழை திருத்தத்தை அறிவிப்பது அனைவருக்கும் நல்லது. உடனடியாகப் பிழை திருத்தம அறிவிக்கப்பட்டால், 10.02.04 தை 27 கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, மாசி மகத்தன்று தீர்த்தம் நடக்கும் யாழ். கடைத்தெரு வேம்படி சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம் சரியான நாளில் ஒருநாள் பின்னர் ஆரம்பமாக வாய்ப்புண்டு.

மேலும் யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் சுமார் 10 வாக்கிய பஞ்சாங்கங்களும் 5திருக்கணித பஞ்சாங்கங்கங்களும் வெளிவருகின்றன. இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைத் தவிர்ந்த ஏனைய சகல பஞ்சாங்கங்களும சங்கடஹர சதுர்த்தி விரத நாளை நிர்ணயிப்பதற்கு ஒரே விதிமுறையையே பின்பற்றுகின்றன. இராகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தில் மட்டும் வித்தியாசமான முறைப்படி சங்கடஹர சதுர்த்தி விரத நாள் நிர்ணயம் செய்யப்படுகிறது.

அமாவாசை முடிந்த பின்னர் வளர்பிறையில், பூர்வபஷ்ச சதுர்த்தியுடன் வருவது சதுர்த்தி விரதம். பூரணை முடிந்த பின்னர் தேய்பிறையில், அபரபஷ்ச சதுர்த்தியுடன் வருவது சங்கடஹர சதுர்த்தி விரதம். இந்த இரு விரதங்களுக்கும் வெவ்வேறு விரத நிர்ணய விதிமுறைகள் உள்ளன. ஆனால், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினர் இவ்விரு விரதங்களுக்கும ஒரே விதிமுறையையே பின்பற்றுகின்றனர். இவ்வருடப் பஞ்சாங்கத்தில் மட்டுமல்ல, பல வருடங்களாக இவ்வாறு தான் கணிக்கின்றனர்.

பூரணை முடிந்த பின்னர் தேய்பிறையில் வரும் அபரபஷ்ச சதுர்த்தியன்று, சூரியன் அஸ்தமனமாகி ஒரு சில மணித்தியாலத்திற்குள் சந்திரோதயம நிகழும். அந்நேரத்தில் சதுர்த்தி திதி இருக்கும் தினமே சங்கடஹர சதுர்த்தி விரதநாள். இவ்விதிமுறையை, இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் தவிர்ந்த, இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவரும் சகல பஞ்சாங்கங்களும் பின்பற்றுகின்றன. கிட்டத்தட்ட 18 நாழிகையில் நண்பகல் 01.13இல் பூர்வபஷ்ச சதுர்த்தி திதி இருக்கும் தினம் சதுர்த்தி விரத நாள் என்ற விதிமுறையை இரகுநைதயா வாக்கிய பஞ்சாங்கத்தினர் சதுர்த்தி விரத நிர்ணயத்திற்குப் பின்பற்றுகின்றனர்.

இவ்விதி முறையையே அவர்கள் சங்கடகர சதுர்த்தி விரத்திற்கும் பயன்படுத்துகின்றனர்.

இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினரது கணிப்புப்படி அபரபஷ்ச சதுர்த்தி திதி 31.10.04 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.21இல் ஆரம்பமாகி, 01.11.2004 திங்கட்கிழமை பிற்பகல் 02.15 இல் முடிவடைகிறது. சந்திரோதயத்தில் சதுர்த்தி திதி இருக்கும் நாளே சங்கடஹர சதுர்த்தி விரதநாள் என்ற விதிக்கமைய 31.10.2004 ஞாயிற்றுக்கிழமையன்றே அவ்விரதம் வரவேண்டும். ஆனால், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வெளிவரும் கலண்டர்களில் சங்கடஹர சதுர்த்தி விரதம் 01.11.2004 திங்கட்கிழமை என்று பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மாத்திரமல்ல 2004இல், மே 07இல் வரவேண்டிய சங்கடஹர சதுர்த்தி விரதம் மே 08இலும் ஓகஸ்ட் 3இல் வரவேண்டிய சங்கடஹர சதுர்த்தி விரதம் ஓகஸ்ட் 04இலும் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வெளிவரப்போகும் தாரண வருட 2004/05 பஞ்சாங்கத்தில இப்பிழைகளைத் திருத்துவது அல்லது பிழை திருத்தம் அறிவிப்பது அனைவருக்கும் நல்லது.

யாழ்ப்பாணத்தில் சுமர் பிற்பகல் 01 .13 மணிக்கும் சந்திரோதயத்திற்கும இடையில் அபரபஷ்ச சதுர்த்தி திதி முடிவடையும். அநேகமான நாள்களில் சங்கடஹர சதுர்த்தி விரதம் என்று இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தினா பிழையாகக் குறிப்பிடுகின்றனர். இங்கு, முதல் நாளில் சந்திரோதயத்தில் அபரபஷ்ச சதுர்த்தித் திதி இருப்பின் அன்றே சங்கடஹர சதுர்த்தி விரதம் வரும்.

**- கௌசிகர்.**

*(தமிழ்த்தாய் நாட்காட்டி கணிப்பாளர்)*
*கனடா.*

## படிப்பகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ். கந்தர்மடம் சிவசக்தி சன சமூக நிலையத்தின் படிப்பகம் தைப் பூச தினமான இன்று காலை 8.05 மணி தொடக்கம் 9.35 மணி வரையான சுபநேரத்தில் திருநெல்வேலி தெற்கு ஸ்ரீநீலாதயாட்சி சமேத காயாரோக ணேஸ்வரர் ஆலயத் தெற்கு வீதியில அமைந்துள்ள கட்டடத்தில் மீளஆரம்ப மாகவுள்ளது. (ஒ-10)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, சர்மி நடித்த

காதல் அழிவதில்லை (சிக்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

How To Lose A Guy In 10 Days

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28-09-1921 மறைவு 29-01-2002

திருமதி

**மாணிக்கம் அன்னம்**

திதி: தைப்பூசம் (05.02.2004)

"நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்...."

'அபிராமி மகால்',
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (சி-33121) (26-11-17-30)

- குடும்பத்தினர்.

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

**செல்வி தர்மிகா கருணாநிதி**

உதயம் - 12.03.1999 மறைவு - 02.02.2004

எமது தவமலர் முன்பள்ளியின் மாணவி செல்வி தர்மிகா கருணாநிதி அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்புத் தாய்க்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.

தவமலர் முன்பள்ளி,
மருதங்கேணி வடக்கு, தாளையடி. (சி-33114)(30-13-17)

யாழ்ப்பாணத்தில்

மங்களகரமான திறப்பு விழா

NEELAN PHARMA CEUTICALS (PVT) LTD.

அன்புடையீர்!

BAUR & Co. Ltd, CIC Pvt.Ltd, walker &. Greig.Ltd, NAWAGRAMA Ltd, ஆகிய பிரபலமருந்து நிறுவனங்களின் வடமாகாண ஏக விநியோகஸ்தர்களான

NORTH EAST ECONOMIC LEGALIZE ADMINISTRATIVE NET WORK

நீலன் பார்மஸூட்டிக்கல்ஸ் பிறைவேற் லிமிட்டட்

(யாழ் நகரின் பிரதான தலைமையகம்)

எனும் ஸ்தாபனம்:

இன்று (05.02.2004) வியாழக்கிழமை

தைப்பூச நன்னாளில்

திறந்து வைக்கப்படுகின்றது.

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல- 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

☎ 071 2726503 , 0712 - 338079.




விளம்பர அனுசரணை :- குமரன் பார்மஸி. (28020) (41)

## மரண அறிவித்தல்

**Dr.கதிர்காமு இரத்தினசபாபதி**

புலோலி தெற்கைச் சேர்ந்த Dr.கதிர்காமு இரத்தினசபாபதி அவர்கள் (03.02.2004) செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர் காமு-மூத்தநாச்சிப்பிள்ளை தம்பதிக ளின் இளையமகனும், சாந்தாவின் அன்புக் கணவரும் சோபனா, சியா மளா, தாரணி ஆகியோரின் அன் புத் தகப்பனாரும், இரவிச்சந்திரன், சுதாகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரத்ன மண்டபத்திலிருந்து இன்று (05.02. 2004) வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.செல்வவிநாயகம்
(சகோதரன்).

புலோலி. (சி-33122)(30-11-17)

## மரண அறிவித்தல்கள்

**செபஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் குலசிங்கம்**

**(பட்டயக்கணக்காளர், முன்னாள் நிர்வாக இயக்குநர், தலைவர் - நெசெல்ஸ்)**

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாக வும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை பெனடிக்ற் குலசிங்கம் அவர்கள் 02.02.2004 அன்று காலமானார்.

அன்னார் வல்வெட்டித்துறை, நெடியகாட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை - திருமதி மரியம்மா செயஸ்தியாம்பிள்ளை ஆகி யோரின் அன்பு மகனும் பிரிசிலாவின் அன்புக் கணவரும், பிரிய டக்ஷினி (ஆஸ்திரேலியா), தயானிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தை யும், யூட் சினெமன்ட் (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமனாரும், அலோசியஸ் இராஜசிங்கம், பேனாட் குணசிங்கம், அன்ரன் இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரன் திகவீரசிங்க (ஆஸ்திரேலியா), காமல், செலின், ரஞ்சினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 07.02.2004 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பொறளை ஜெயவர்த்தன மலர்சாலையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, கனத்தை கத்தோலிக்க மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 06,*
*பிரான்ஸிஸ் மகாதேவா அவனியு,*
*கொழும்பு - 04,*
*தொ.பே.: 2587685.*

தகவல்:
டிறிசிவா, குலசிங்கம்,
செ.அன்ரன், இரத்தினசிங்கம்.

*நெடியகாடு, வல்வெட்டித்துறை.* (சி-33112)(30-13-17)

**திருமதி மேரிமாக்கிறேட் (பேபி) யோசப்**

வசாவிளானைச் சேர்ந்த திருமதி மேரிமாக்கிறேட் (பேபி) யோசப் அவர்கள் காலமானார்.

வடமூலை வசாவிளான் உத்தரியமாதா கோவிலடியைச் சேர்ந்த வஸ் தியாம்பிள்ளை ஆசீர்வாதம் - லூர்து நாயகம் றோசம்மாவின் (இளைப் பாறிய ஆசிரியை, ஒட்டகப்புலம் றோமன் கத்தோலிக்க பாடசாலை) பாசமிகு மகளும் அன்னமேரி கிறேஸ் (பிரான்ஸ்), டெய்சி (கரவெட்டி) ஆகியோரின் ஆசைத்தங்கையும், மரியாம்பிள்ளை யோசப் (சவூதி) அவர் களின் அனபுமிகு மனைவியும் நியூமன் அன்ரனிராஜ் (பிரான்ஸ்), யூட்சன் நீதிராஜ் (பிரான்ஸ்), நியூட்டன் ஜோதிராஜ் (சவூதி அரேபியா), நெல்சன் இன்பரூபன், மொறின்டயானா (பருத்தித்துறை, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை மாணவி), கிறிஸ்ரீன் சாந்தி ஆகியோரின் அன்புத்தா யாரும் யக்கிலின்வினி (பிரான்ஸ்), சுமித்திரா (கொழும்பு), தெய்வேந்திரம் ஆகியோரின் மாமியாரும் வோன்ஷன், மேரிகியூரி, அலெக்ஸ் ஆகியோ ரின் பாசமிகு பேர்த்தியாரும் திரகரி, தவராசா ஆகியோரின் மச்சாளும் கிங்சிலி (லண்டன்), ஆன்சிவி (கொழும்பு), மேவின், தர்சினி (பிரான்ஸ்), பொப்பி (பிரான்ஸ்), சாமினி (பிரான்ஸ்), மைக்கல் (பிரான்ஸ்), கபிரியல் (பிரான்ஸ்), றபாயல் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறியதாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியுடன் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுபயோசம்,*
*பிரதான வீதி, இளவாலை.* (28070)(30-13-17)

தகவல்:
ம.யோசப் (கணவர்).

JMJ

✝

மங்களகரமான

புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபானு வருடம் தைத்திங்கள் 22 ஆம் நாள் இன்று (05.02.2004) வியாழக் கிழமை காலை 8.35 மணிமுதல் 10.05 மணிவரையுள்ள (புதியநேரம்) சுபமுகூர்த்த நல்வேளையில்,

TOKYO MOTORS & HARDWARES

ரோக்கியோ மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்

என்னும் வியாபார ஸ்தாபனத்தை இல.134, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர், அபிமானிகள் அனைவரும் சமுகந்தந்து நிறுவனத்தை வாழ்த்தி திறப்புவிழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

134, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

E.mail: Benneys@slt.lk. ☎ 3712
Fax: 3818

தங்கள் நல்வரவை விரும்பும்:
நிர்வாகத்தினர்.

எம்மிடம் தரமான CIC பெயின்ற் வகைகள், PVC பைப் - பிற்றிங்ஸ், தரமான மாபிள் வகைகள், டொல்பின் வாகனங்களின் அலங்கரிப்புப் பொருள்கள், விளம்பரப்பலகை ஸ்ரிக்கர் வகைகள், அதிநவீன கேட்டின் வகைகள், காப்பெற் வகைகள் போன்றவையும் இன்னும் பல சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

பெயர்ப்பலகை ஸ்ரிக்கர் வகைகளுக்கு - கொழும்பு சைன்ரக்ஸ் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.

(28061)(34-13-17-30)

யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இருவர் தொடர்புகொள்ளக்கூடிய Sanyo 5K.m. Cordless ரெலிபோன், வீதி ஓரத்தில் நாட்டக்கூடிய, இருபக்கமும் எழுதக்கூடிய 8'x3' விளம்பரப்பலகைகள், Yamaha 900 Watts ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.407, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி. T.P.: 222 5840. (27963)

நல்ல நிலையிலுள்ள CL தொடரிலக்கமுடைய A 40 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 264, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777 152330 (27966)

மோட்டோரோலா மேசைத் தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.முகுந்தன். 0777-291978. (28018)

## திருமண சேவை

1975, விசாகம் 2, செவ்வாய் 7, அழகிய, U.K. Accountancy மாணவிக்கு படித்த மணமகன் P.R. உடன் தேவை. சீதனம் உண்டு. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு உடன் தொடர்பு: இலகு திருமணசேவை, துரைவிமலா, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (28057)

## மணமகள் தேவை

இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970 இல் பிறந்த, அரச வங்கியில் பணிபுரியும், உயரம் 5'3" உள்ள மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். சீதனம் பெரிய அளவில் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: விளம்பர இல.2158, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28044)

## வீடு வளவு விற்பனை

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோவிலுக்கு அண்மையில் காலியாக உள்ள வீடு வளவு உடன் விற்பனைகுண்டு. தொடர்பு: அச்சுவேலி தெற்கு - சிவசக்தி கோயிலடி - குமரையா நித்தியானந்தன், முரளி - 071-4744943, நடராஜா - 0112-59238. (சி-33091)

## புறொயிலர் தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. கூடுதல் விலை தரப்படும். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (C/33093)

## தவறிவிட்டது

2 பவுண் நிறையுடைய சிவப்பு மணி பொருத்தப்பட்ட சங்கிலி ஒன்று திருநெல்வேலிக்கும், உரும்பிராய்ச் சந்திக்குமிடையில் மினிபஸ்ஸில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் லஷ்சுமி ஸ்ரோர்ஸ், கொக்குவிலில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (28035)

இலகடி, வலந்தலை, காரைநகரைச் சேர்ந்த வடிவேலு பூமகள் என்பவருடைய தேசிய அ.அ. (808182238 v), விஷேட அ.அ., பல்கலைக்கழக அ.அட்டை என்பன நேற்றுமுன்தினம் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வயூமகள், உடையார் விடுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (T.P.: 222-2142) என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (28060)

பிறேமி நிலானி பெண்டிக்ற் இம்மனுவல் என்பவரின் தேசிய அ.அ. (78735 3347v), விசேட அ.அ. (0901004150) என்பன அடங்கிய கைப்பை 29.01.2004 அன்று யாழ். நவீன சந்தை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 49,A வேம்படி வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (28055)

"கல்வியே ஒளி கல்வியே வழி"

## வாழ்வகம்

(விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்)

காப்பாளர் விடுதி

## திறப்பு விழா

காலம் : இன்று (05.02.2004) வியாழன் காலை 10.00 மணியளவில்

திறந்துவைப்பவர் : அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்

*(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.* (28064) (22-11-13-30)

*இங்ஙனம்:*
வாழ்வக சமூகத்தினர்.

## தைப்பூச இசை வகுப்புக்கள்

சகல மேலைத்தேய, கீழைத்தேய இசை வகுப்புக்களும் இன்று (05.02.2004) வியாழக்கிழமை தைப்பூசத்தன்று காலை 9.00 - 12.00 p.m வரை ஆரம்பம்.

வாசுகி ரங்கன்,
நியூவீணா கானம்,
16/2 கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்நகர். (28057)

## SHAMROCK

J/ஈச்சமோட்டை வீதி.

**A/L 2006+05**

Com. - பசில B.B.A.
Acc. - தவா B.Com(Hons.)(Acc.Spl.)
Econ. - விக்கி B.A.(Hons.)(Econ.Spl.)
Eng. - ஜெயக்குமார் B.A.

▲ Gr. 3 முதல் O/L வரை
▲ Eng. Literature
▲ Spoken Eng. (28053)

## விற்பனைக்கு

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் UPCO-NO.1, DAIDO கெல்மற்றுக்கள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

வளர்மதி உதிரிகள் வாணிபம்,
இல.19, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (28009)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இளவாலையைச் சேர்ந்த எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களான







"கலாபூஷணம்", பண்டிதர் சிறீரங்கம் அப்புத்துரை

"கலாபூஷணம்", சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை


"கலாபூஷணம்" சுப்பிரமணியம் நமசிவாயம்

இவர்கள் மூவருக்கும் 04. 02. 2004 புதன்கிழமை *"கலாபூஷணம்"* விருது வழங்கப்பெற்றதையிட்டு, இவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஒல்லுடை ஞானவயிரவப் பெருமானின் திருவருட் கடாட்சத்தால் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழவேண்டுமென்று மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

காடிவளை,
இளவாலை. (28059)(34-13-17-30)

ஒல்லுடை ஞான வயிரவர் ஆலய
பரிபாலன சபையினரும்,
இந்து இளைஞர் சனசமூக நிலையத்தினரும்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இளவாலையைச் சேர்ந்த சைவப்புலவர்

### சு.செல்லத்துரை

அவர்கள் 04-02-2004 அன்று கலாபூஷண விருது பெற்ற உவகையில்,

*தான் பிறந்த நாட்டிற்கு தாராளமாய் பயன்செய்து*
*தேன் தமிழ்சைவம் செழிக்க சைவப்புலவராகி*
*மேன்மைக் கல்வியால் மேதினியில் நல் அதிபராகி*
*சான்றோனாய் சகம்புகழ் சரித்திர நாயகனாய்!*

*எக்காலமும் எங்கும் ஏற்றமிகு பிரசங்கத்தால்*
*தக்க நயம் நிறை நடிப்பால் நாடக மேதையாய்!*
*திக்கு எங்கும் தீம் கவிபரப்பி எம்மையும் உயர்த்திய*
*முக்கவிச் சாறன்ன எங்கள் முதல்வா சகோதரா.*

*பற்பல பட்டங்கள் பாங்குடன் நாடிவர,*
*சுற்றும் புவியில் அறிவுச் சுந்தரனாய் – உயர்*
*ஆற்றலால் கலாபூஷண விருது பெற்றீர் – உம்*
*பற்றுடை சகோதரிகள் யாம் பாங்குடன் வாழ்த்தினோம்.*

பாராட்டி வாழ்த்துவோர்:
சகோதரிகள்: செல்லம்மா,
செல்வநாயகி,
செல்லமணி,
மைத்துனர்: க.இராசேந்திரம்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உ
சிவமயம்

## பருத்தித்துறை மக்களுக்கு ஒரு நற்செய்தி..!



தைப்பூச தினத்தன்று

## மங்களகரமான திறப்புவிழா

அன்புடையீர்!

இன்று (05-02-2004) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிமுதல் 1.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்,



பருத்தித்துறை, பிரதான வீதியில்

## நியூ லக்சுமி சில்க்

என்னும் வியாபார ஆடையகம் எம்மால் ஆரம்பிக்கப்படுகின்றது.

அத்தருணம் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

※ நவ்நாகரிக நங்கையர் விரும்பும் சாறி வகைகள்
※ நூல் சாறிகள் ※ பட்டுச் சாறிகள் ※ சல்வார் கமீஸ்
※ ஸ்கேட் அன் பிளவுஸ்
※ ஆண்களுக்கான சேட், சூட், ஜீன்ஸ் துணிகள்
டெனிம் ஜீன்ஸ், T சேட் - வேட்டி சால்வைகள்
※ குழந்தைகளுக்கான பேபி சூட், குடைகள்
※ அழகுசாதனப் பொருள்கள

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**நியூ லக்சுமி சில்க்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

☎: 0777 779052.
E.mail: new laksmie silk 251@yahoo.com.

(28031)(34-13-17-30)

# இனவாதக் கட்சிகளின் புதிய கூட்டணி: நாம் எச்சரிக்கையுடன்தான் இருக்கிறோம்

## சுவிஸில் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



கொழும்பு,பெப்.5

கூட்டுச் சேர்ந்துள்ள இனவாதக் கட்சிகள், தமிழ் மக்களை மீண்டும் ஒடுக்குமுறைக்குள் த்ள்ளுவதற்கு வியூகம் வகுக்கக் கூடும். ஆகவே, நாம் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்கிறோம்.

- இப்படிக் கூறியுள்ளார் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம மேற்கொண்டுள்ள தமிழ்ச்செல்வன் சுவிஸில் கடந்த திங்களன்று தனியார் வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செவ்வியின் விவரம் வருமாறு:-

*கேள்வி:* உங்களது இந்த விஜயம் பற்றி...?

பதில்: நோர்வேயின் ஒழுங்குபடுத்தலுடன் நாம் மேற்கொண்டுள்ள இந்த விஜயத்தின்போது நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர், பிரதி வெளிவிவகார அமைச்சர் மற்றும் உதவி வழங்கும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருடன் பல்வேறு உயர்மட்டச் சந்திப்புகளை நோர்வேயில் நடத்தினோம்.

நோர்வே அரசுத் தரப்புடனான சந்திப்பின்போது சமாதான முன்னெடுப்புக்கள், எங்களுடைய நிலைப்பாடுகள், எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி அவர்களுக்குத் தெளிவாக விளக்கினோம். சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து அவர்களுடன் விரிவாக விவாதித்தோம்.

மிக முக்கியமாக யுத்தத்தால் பாதிகப்பட்டு, வாழ்வியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து, மனிதாபிமான தேவைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு ச்ர்வதேச சமூகத்தின் உதவிகள் அவசியமாகின்றன.

சமாதான முயற்சிகளில் நம்பிக்கை கொண்டிருந்த மக்களுக்குத் தற்போதைய நிலை ஏமாற்றத்தையே கொடுத்திருக்கிறது.

எமது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு ச்ர்வதேச உதவிகளைப் பெறும் நோக்கில் எமது இந்த விஜயம் அமைந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டப் பிரதிநிதிகளையும் வேறு பல நாடுகளின் வெளிவிவகார அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளோம்.

சமாதானம் நோக்கியதான எமது நிலைப்பாடு குறித்த - தேசியத் தலைவரின் - செய்தியை இந்த அதிகாரிகளிடம் தெரிவிப்போம். எமது போராட்டத்தின் உண்மை, நீதியான செயற்பாடுகள், அர்ப்பணிப்புக்கள் ஆகியவற்றைச் ச்ர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்துவோம்.

இந்த நோக்கங்கள் குறித்த எமது விஜயம் நோர்வேயில் திருப்திகரமாக நிறைவடைந்துள்ளது. எமது கருத்துக்களை அவர்கள் உணர்ந்துள்ளார்கள் என எம்மால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

தமிழீழத் தேசத்தில் உண்மையாகவே உரிமைப் போராட்டம் தான் நடைபெறுகிறது என்பதை ச்ர்வதேச உலகம் உணரும் காலம் கனிந்துளளது. அது எமது போராட்டத்தின் பெரும் திருப்பம்.

எமது தலைவரின் ராஜதந்திர அணுகுமுறைகள், தீர்க்கதரிசன வழிகாட்டல்கள் ஆகியவை குறித்து எல்லோரும் திருப்தி தெரிவித்தார்கள்.

இந்தப் பயணம் எமது தமிழ் மக்களுடைய எதிர்காலச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டுவதாக அமையும்.

*கேள்வி:* இலங்கையில் தற்போது அரசியல் சிக்கல் நிலை நிலவினாலும், ச்ர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவி வழங்குவதில் பின்நிற்கக கூடாது என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளமை தமிழர்களின் மத்தியில் ஒருவித குழப்பத்தை உருவாக்கியிருக்கிறதே, அது பற்றி...?

பதில்: அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம். ஆனால், நாம் எமது நிலைப்பாட்டை தெளிவாகத்தெரிவித்துள்ளோம். இலங்கையில் அரசியல் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் தாம் வழங்கும் உதவிகளை சர்வதேச சமூகம் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறது. இது எல்லோருக்கும் தொியும்.

அண்மையில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் மீளாய்வுக்கூடடத்திலும் ச்ர்வதேச சமூகம் தனது இந்த நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றது.

இன்றைய நிலையில், இலங்கைக்கு ச்ர்வதேச சமூகம் உதவிகளை வழங்குவது என்பது அர்த்தமற்றதாகவே அமையும். ஏனெனில் அங்கு நிலவும் அதிகார இழுபறியின மத்தியில் வழங்கப்படும் உதவிகள் சரியான முறையில் சரியான இடத்திற்குப் போய்ச்சேரும் என நாம் நம்பவில்லை, அங்கு தேர்தல் நடக்கலாம். அது பெரியபிரச்சினைகளை ஏற்படுத்தும். ஆகவே, உதவிகள் மக்களுக்குச் சென்றடைவதை உத்தரவாதப்படுத்த முடியாது. இதை ச்ர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

எங்களுடைய மக்களுக்கு ச்ர்வதேச சமூகம் நேரடியாக மனிதாபிமான உதவிகயை வழங்க வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகிறோம்.

*கேள்வி:* இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி....?

பதில்: இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அர்த்தப்பரிமாணங்கள் பற்றி எமக்கு உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஊடகங்கள் மூலமே இதுபற்றி அறிகிறோம். ஆனால் இப்படியான ஒப்பந்தம சமாதான முயற்சிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதே யதார்த்தம்.

இராணுவ சமநிலை இதனால் குழப்பமடையும். அது நெருக்கடியைத் தோற்றுவிக்கும். ஆகவே, அப்படியான சூழலை ச்ர்வதேச சமூகம் தவிர்க்கும் என நாம் நம்புகின்றோம்.

*கேள்வி:* ஸ்ரீல.சு.க.-ஜே.வி.பி கூட்டு குறித்து....?

பதில்: சிங்கள இனவாதக் கட்சிகள் இணைந்து தமிழ் மக்களை மீண்டும் ஒடுக்குமுறைக்குள் தள்ள ஆபத்தான செயற்பாட்டை வகுத்துக்கொள்ளக்கூடும்.

அந்த வகையில் நாம் எப்பொழுதும் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்கிறோம் ச்ர்வதேச சமூகத்திற்கு இதை வலியுறுத்தி வருகிறோம்.

இனவாதக்கூட்டு, கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள், அமைதி முயற்சி மீதான விமர்சனம், நோர்வேக்கு எதிரான கண்டனம் போன்ற இனவாத அமைப்புக்களின் செயற்பாடுகள் சமாதான முயற்சிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகியுள்ளன.

ஆனால், சமாதான முயற்சியில் நம்பிக்கையுடன் நாம் உறுதியாகவும் பலமாகவும் உள்ளோம். எமது மக்கள் அஞ்சத் தேவையில்லை நாங்கள் ஏமாற்றப்பட முடியாத சக்தியாக இருப்போம். மக்கள் நம்பிக்கையுடன் எமது அமைப்பைப் பலப்படுத்த வேண்டும்.

-இப்படி அவர் கூறினார்.

## அதிபர் நியமனம்

சண்டிலிப்பாய்,பெப்.5

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின புதிய அதிபராக திருமதி கிருபாசக்தி சிவராசா பொறுப்பேற்றுள்ளார். இக்கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்த செல்வி போ.கந்தசாமி தமது பதவியிலிருந்து கடந்த மாதம் ஓய்வுபெற்றுச் சென்றார. இதனையடுத்தே புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-185)

## மாணவருக்கு உதவி

தென்மராட்சி,பெப்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களில் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வித் தேவைக்குப் பயன்படும் சகல ஆவணங்களையும் விசேட சலுகை அடிப்படையில் 'போட்டோ' பிரதி செய்து கொடுக்க தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் முன்வந்துள்ளது.

இந்தச் சேவையை சகல பாடசாலைகளுக்கும் அறிவித்து மாணவர்கள் பயன்பெறுவதற்கு உதவுமாறு சங் கத் தலைவர் சி.சுப்பிரமணியம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். (ஓ-117)


உ
சிவமயம்

திருநெல்வேலி

பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்

2004ஆம் ஆண்டு வருடாந்த மகோற்சவம் இன்று (05.02.2004) வியாழக்கிழமை கொடியேற்றம் பகல் 11.00மணியளவில் நடைபெறவுள்ளது.

10ஆம் திருவிழா மஞ்சம் - 14ஆம்திகதி - சனிக்கிழமை
12ஆம் திருவிழா கயிலாயவாகனம் - 16ஆம்திகதி - திங்கட்கிழமை
14ஆம் திருவிழா சப்பரம் - 18ஆம்திகதி - புதன்கிழமை
15ஆம் திருவிழா தேர் - 19ஆம்திகதி - வியாழக்கிழமை
16ஆம் திருவிழா தீர்த்தம் - 20ஆம்திகதி - வெள்ளிக்கிழமை
21ஆம் திகதி சனிக்கிழமை பகல் அன்னதானம்
- மாலை தண்டிகை உற்சவம்
22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை -வயிரவர் உற்சவம்

பிரசுர அன்பளிப்பு:
கனகா பத்திரிகை விற்பனை நிலையம்
இல.6, பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி. (C/33102)(37-11-26)



நன்றி நவிலல்

நேற்றுமுன்தினம் (03.02.2004)
செவ்வாய்க்கிழமை G.P.S. வீதி,
கல்வியங்காட்டில் *"கார்த்திகாயினி"*
இல்லத்தில் மறைந்த
எங்கள் அன்புக் குலவிளக்கு

ஜெயரட்ணம் சந்துரு

அவர்களின் அந்தியேட்டிக்கிரியையினை முன்னின்று நடத்திய எமது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு தங்கள் துக்க மனஉணர்வை எங்களுடன் பகிர்ந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

G.P.S.வீதி, கல்வியங்காடு.
416-2677661
021-222-3303
021-222-3731
(28034) (37-11-26)

திரு.திருமதி ஜெயரட்ணம்,
சகோதரன், சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
பேர்த்திமார், மாமிமார்,
மாமன்மார், சித்தப்பா, சித்தி.



துயர் பகிர்கின்றோம்

பருத்தித்துறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு அ. நிர்மலன் அவர்களின் அன்புத் தந்தையார்

செல்லத்துரை அரியரத்தினம்

அவர்கள் 18.01.2004 இல் கொழும்பில் காலமானதையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம்,
யாழ். மாவட்டம்.
(28040)(36-11-26)



கடை இடம்மாற்றம்

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க
முன்பாக இயங்கிய

லிங்கம் அழகு சாதன மாளிகை

02.02.2004 தொடக்கம் முன்னைய இடத்தில் *(அம்பிகா மருந்தகம் அருகில்)* வியாபார நடவடிக்கையினை
ஆரம்பித்துள்ளது என்பதனை நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி. (சி-33104)(36-11-26)

உரிமையாளரும்,
ஊழியர்களும்.



லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
புதிய அனுமதி -2004

தகைமை :- க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் சித்தி
வைத்திய பரம்பரையினராயின்
க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தி

வயதெல்லை :- 30 வயதிற்குட்பட்டவர்கள்

விண்ணப்பங்கள் 15.03.2004 வரை ஏற்றுக்
கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில்
அலுவலக நேரத்தில் ரூபா 20 செலுத்திப்
பெற்றுக்கொள்ளவும்.

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (28027)(36-11-26) - பதிவாளர்.



31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது கல்லூரி நூலக உதவியாளர்
திருமதி கா. உதயகுமாரன் அவர்களின் அன்புமாமியார்

திருமதி பரிமளம் இராசையா

அவர்கள் 06.01.2004 இல் காலமானதையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவருடைய ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ இராமநாதன் கல்லூரி.*
*சுன்னாகம்.* (28033)(36-11-26)

- அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.



கண்ணீர் அஞ்சலி

சங்கானைப் பிரதேச செயலக சமுர்த்தி
உத்தியோகத்தர் திரு.வ. ராஜ்குமாருடைய தந்தை

கிருஷ்ணசாமி வரதராஜன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கானைப் பிரதேச
செயலகம், நலன்புரிச் சங்கம்.
(28041)(36-11-26)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தவப்பேறு 01 - 04 - 1929



சிவப்பேறு 17 - 01 - 2003

## அமரர் வேலுப்பிள்ளை முத்துக்குமாரு

**திதி: பூர்வபக்க தை சதுர்த்தசி**

**05.02.2004**

ஆண்டொன்று ஓடி மறைந்ததே அப்பா!
ஆண்டவன் பாதமதில் ஆறியே இருந்திட்டீர்!
பாசமுடன் உறவுகள் தவிக்கின்றனவே!
என்றும் ஆசிகளை வழங்கிடுவீர் எமக்கே!.
ஓம் சாந்தி !

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.* (சி-33125)(37-36-14-38) - குடும்பத்தினர்.

# 9ஆவது ஆண்டு நினைவலைகள்

மண்ணகம் 05 - 04 - 1926



விண்ணகம் 15 - 01 - 1995

## அமரர் ஏரம்பு சோதிலிங்கம் (மண்டைதீவு)

**திதி 05.02.2004**

அன்புக்கரம் நீட்டி எம்மை அரவணைத்தீர்கள்!
அறிவுத்திறன் கொண்டு வாழ்வில் வெற்றிகண்டீர்கள்!
சோதி என்ற நாமம் பாரினில் புகழ்பெற வைத்தீர்கள்!
ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் அறுமோ எம் துயர்?
"ஓம்சாந்தி"

தங்கள் பிரிவால் வாடிநிற்கும்:
மனைவி, பிள்ளைகள். மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரி, மைத்துனர்.

*411/2, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (28080) (37-14-36-17)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 549 |
| திகதி | 03.02.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்


செல்லுபடியாகும் தொடர் இல.
**4505035-4519460**

**வெற்றி இலக்கங்கள் 20 25 29 32**

**லக்கினம்**

**விருச்சிகம்**

**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 1,000,000/-**
**வெல்லப்படவில்லை**



**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,707,450/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 316,914 | 10 | 3,169,140 |
| 2 இலக்கங்கள் | 29,228 | 20 | 864,630 |
| 1 இல + லக்கினம் | 28,821 | 30 | 864,630 |
| 2 இல + லக்கினம் | 2,611 | 100 | 261,100 |
| 3 இலக்கங்கள் | 783 | 500 | 391,500 |
| 3 இல + லக்கினம் | 63 | 5,000 | 315,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,000,000 | - |
| மொத்தம் | 378,424 | - | 5,985,930 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.5,985,930/-

தொடர் இல. 5490291க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 பெப்ரவரி 06ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4505596-8-77**
**4511533-3-35**
**4505944-5-15**
**4519031-4-49**
**4507182-0-80**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## திறப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம்,பெப்.5

சுன்னாகத்தில் இயங்கிவரும் 'வாழ்வகம்' விழிப்புலவலுவிழந்தோர் இல்லத்துக்கான காப்பாளர் விடுதியை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்து வைக்கவுள்ளார்.

★ ★ ★

வட்டுக்கோட்டை,பெப்.5

அராலி மேற்கு நொச்சியம்பதி சனசமூக நிலைய கட்டடத் திறப்புவிழா இன்று மாலை 5 மணிக்கு சமகேந்திரன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து விவகார அமைச்சர் திமகேஸ்வரன் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைப்பார். (ஒ-10-161)

## ஐ.ஐ.எஸ்.நிறுவன சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்ப்பாணம் ஐ.ஐ.எஸ். கணனிக் கற்கை நிறுவனத்தின் 8ஆவது ஆண்டு நிறுவன தினமும் சான்றிதழ வழங்கும நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி ஜுபிலி மண்டபத்தில நிறுவன இயக்குநா கே. விக்னேஸ தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் 'இனபொரெல் லங்கா' நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் டேவிட் டொமினிக, 'எக்செல் இன்ரநஷனல்' நிறுனவத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான முகாமையாளர் பிரசாந்த பொனாணடோ ஆகியோர் கௌரவ விருநதினர்களாகக கலந்துகொள்ளவுள்ளனர்.

நிறுவனத்தின் கற்கைகளில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.(ஒ-10)

### ஆசிரியர்கள் தேவை

தரம் 1 முதல் 5வரை அனைத்து பாடங்களிற்கும், தரம் 6, 7, 8 இற்கு சமய பாடத்திற்கும்.

நேர்முகத்தேர்வு 7.02.2004,
சனி காலை 8.30 மணி.
- நிர்வாகி. (28085)(37)

மது கல்வி நிறுவனம்
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

# மரண அறிவித்தல்கள்

## இராஜரத்தினம் புஷ்பராஜன்

வதிரியைச் சேர்ந்த இராஜரத்தினம் புஷ்பராஜன் அவர்கள் 03.02.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் இராஜரத்தினம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதலவரும் கலைவாணி( ஆசிரியை , விக்னேஸ்வராக்கல்லூரி, கரவெட்டி) அவர்களின் அன்புக் கணவரும் D.M. வேதாரணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), அமரர் இராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கருணாகரன் வசந்தகுமாரி, சிவயோகம் இரத்தினகுமாரி, அமரர் இரத்தினராஜன்(பபி), ஜெயபிரகாஷ், ஜெயகுமாரி, வசந்தராஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மதியூகநாதன் அனந்தீஸ்வரி (ஆசிரியை, சிவகுருவித்தியாசாலை, யா/சிதம்பராக்கல்லூரி, வல்வை), பாரதிதாசன், திவாகரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05-02-2004) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் எமது இல்லத்திலிருந்து ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சோனாவளவு,வதிரி.*
*T.P.NO. 0777162959* (சி-33123)(36-17-14)

தகவல்:
இ.வசந்தராஜன் (சகோதரன்).

## திருமதி தேவதிரவியம் இராசம்மா

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி தேவதிரவியம் இராசம்மா அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தேவதிரவியத்தின் அன்பு மனைவியும் ஜெறாட் (லண்டன்), ஜெயா, ஜோன்சன் (கொழும்பு), சாயிரா (பிரான்ஸ்), நிமியா ஆகியோரின் அன்புத் தாயாரும் நகுலா (லண்டன்), நேசராஜா (பிரான்ஸ்), மேரிஇஸ்ரெலா (கொழும்பு), சேகரன் (பிரான்ஸ்), சாள்ஸ் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித மிக்கேல் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.* (28077)(37-14-17-36)

தகவல்:
நிமியா சாள்ஸ் (மகள்).

## சிறினிவாசகம் சுந்தரலிங்கம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய சிறினிவாசகம் சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிறினிவாசகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் தரணி, சுஜீவா, குலநந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தராசாவின் அன்புப் பேரனும் சுகுமாரின் மாமனாரும் சம்பந்தர், பஞ்சலிங்கம், இராமலிங்கம் ஆகியோரின் சகோதரரும் இரத்தினம் குமாரசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை மாலை 4.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரையம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (28071)(37-14-17-36)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி ஜெகதீஸ்வரி கந்தசாமி

சந்தைவளவு, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் வடக்கைச் சேர்ந்த திருமதி ஜெகதீஸ்வரி கந்தசாமி அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம் (சாமியார்) - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் கந்தசாமி (இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர், மல்லாகம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் விமலேஸ்வரி, ஜெகநாதன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), சிவகுமாரன் (ACTION FAIM, யாழ்ப்பாணம்), கணேஸ்வரி (திருகோணமலை), கார்த்தியாயினி ஆகியோரின் சகோதரியும், சபாரத்தினம், விமலாதேவி (மருந்தாளர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), தவராணி, செல்வராசா (பிரதம செயலாளர் அலுவலகம், திருகோணமலை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக கொள்ளவும்.

*சந்தைவளவு,*
*கே.கே.எஸ்.வீதி,சுன்னாகம்.* (28075)(40-14-17-36)

தகவல்:
க. ஜெகநாதன் (சகோதரன்)
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி).

## திருமதி விசாலாட்சி (மகேஸ்வரி) சரவணபவன்

(முன்னாள் ஆசிரியர், யா/சரவணை சின்னமடு றோ.க. பாடசாலை)

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் கல்வளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி சரவணபவன் அவர்கள் 03.02.2004 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முன்னர் அறிவித்ததுபோல் இன்று நடைபெறமாட்டாது. நாளைமறுதினம் (07.02.2004) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீழ்வரும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி,*
*சண்டிலிப்பாய்.* (28079) (40-14-17-36)

தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி தயாபரராசா இராசம்மா

(பொன்னரியம்)

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது தொலைபேசி ஒழுங்கை, மானிப்பாயில் வசிததவருமான திருமதி தயாபரராசா இராசம்மா நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தயாபரராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முருகேசு - லக்சுமி தம்பதிகளின் அன்பு மகளும துரைராசசிங்கம் (வர்த்தகர், ஆலடி, உடுவில்) அருள்ராசசிங்கம் (மதுரா மாளிகை, யாழ்ப்பாணம்), விக்கினராசா (முன்னாள் திருச்செந்தூர் ஏஜென்சி, யாழ்ப்பாணம்), சற்குணராசா (மதுரா மாளிகை, யாழ்ப்பாணம்), குவேந்திரராசா (T.K. வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்திராணி, வக்சலாதேவி, இராசமலர், செல்வமலர் (ஆசிரியை, யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரதி, விதுர்ஷன், மிதுலா, தனுசுயன், மதுரா, அங்கஜன், அனுஜன், வவித்திரா, ஸ்ரீரங்கன், செந்தூரன், அபிநயா, ஜனார்த்தனா, பவரூபா, லோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்தில் இருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*தொலைபேசி ஒழுங்கை,*
*மானிப்பாய் வீதி, மானிப்பாய். 0777724905.*

தகவல்:
த. துரைராசசிங்கம்.
(28073)(34-14-17-36)

## படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இரவு பகல் எனத் தொடர்ந்து அதே இடத்தில் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் உடனிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் போராட்டம் நடைபெற்ற வேளை அங்கு வருகை தந்த கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளிடம் போராட்டக்காரர்கள் தமது தரப்புக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

★ எமது போராட்டத்திற்குப் படையினர் அச்சுறுத்தலாக இருக்கின்றனர். பெரும் எண்ணிக்கையில் படையினர் இந்தப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். வீடியோ மூலம் எம்மைப் படம் பிடிக்கின்றனர். இவற்றை உடன் தடுத்து நிறுத்தவேண்டும்.

★ நாம் அமர்ந்திருக்க கொட்டகை ஒன்றை இங்கு அமைக்க இடமளிக்க வேண்டும்.

ஆகிய இரு கோரிக்கைகளையும் போராட்டக்காரர்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் முன்வைத்தனர். இதனைச் செவிமடுத்த கண்காணிப்புக்குழு அதிகாரிகள், அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரியுடன் கலந்துரையாடினர்.

சாத்வீக முறையில்- ஜனநாயக முறையில்- மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். ஆகவே இராணுவத்தை அப்பகுதியில் இருந்து விலக்குமாறு கண்காணிப்புக் குழுவினர் படை அதிகாரியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதையடுத்து ஒரு தொகுதி இராணுவம் அப்பகுதியில் இருந்து வாபஸ் பெறப்பட்டது.

கொட்டகை அமைக்கும் விடயத்தில் பொலீஸாருக்கும்- பொதுமக்களுக்கும் இடையில் நீண்ட நேரம் கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றன. நேற்று நண்பகல்வரை அதற்கு இணக்கம் ஏற்படவில்லை.

கண்காணிப்புக் குழுவினர் இரு தரப்பினருக்கும் இடையில் பேசி அங்கு கொட்டகை அமைக்க ஏற்பாடு செய்தனர். போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படாதவகையில் கொட்டகை அமைப்பதானால் அதற்கு அனுமதிப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர். தாம் இருக்கும் இடத்திலேயே கொட்டகை அமைக்கப் போவதாகக் கூறிய மக்கள், அந்த இடத்தில் நிழலுக்கான கொட்டகை அமைத்துக் கொண்டனர்.

(ஜ-3-117-31)

## சென்றிகள், கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக அமைந்துள்ள யாழ். பிரதான வீதியின் குறுக்காகவும் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

முதலாம் குறுக்கு வீதியில் உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். கிளைக் காரியாலயத்திலும் சிங்கக் கொடி பறந்தது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கிவரும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ் ப.நோ.கூ. சங்க நடுவப்பணியகத்தில் இயங்கி வரும் ரெலிகொம் லிமிடெட் மற்றும் யாழ். தபாலகத்திலும் சிங்கக் கொடிகள் காணப்பட்டன. இதேநேரம் இராணுவத்தினர் நேற்று பயணித்த வாகனங்களிலும் சிங்கக்கொடிகளைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ். நகரில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமையகத்திலும் சிங்கக்கொடி பறந்தது.

வடமராட்சி ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாகவும் சிங்கக்கொடி கட்டப்பட்டிருந்தது.

கண்டி வீதியில் நுணாவில் சந்தி முதல் கொடிகாமம் சந்திவரையான பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம்களிலும் நிலைகளிலும் பெருமளவில் சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

இராணுவ முகாம்களின் முன்புறத்தில் நீளமான கம்பங்களில் கொடிகள் நிரையாகக் கட்டப்பட்டிருந்தன.

கண்டி வீதியில் ஏனைய முக்கிய இராணுவ நிலைகளிலும் பெரும் எண்ணிக்கையில் சிங்கக் கொடிகள் பறந்தன.

(ஜ-17-15-51-70-139)

## புளியங்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றருக்கு அப்பாலுள்ள புலிகளின் புளியங்குளம் சோதனைச்சாவடி வரை சென்றனர் எனினும் புளியங்குளம் சோதனைச்சாவடி முற்றாக மூடப்பட்டிருந்தது.

இதனால், இராணுவ சோதனைச் சாவடிக்கும் புலிகளின் சோதனைச் சாவடிக்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான பயணிகள் கூடிநின்றனர். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், புளியங்குளம் சென்று சோதனைச் சாவடியைத் திறக்கும்படி கோரியும் சாவடி திறக்கப்படவில்லை.

பயணத்தைத் தொடரமுடியாது பல மணிநேரம் காத்து நின்ற பயணிகள் நேற்று நண்பகல் வவுனியாவுக்குத் திரும்பினர்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட வெகுஜென அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று மகஜர்ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள மக்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படல் வேண்டும் என்றும்-

அன்றேல் விரைவில் குடாநாடு தழுவியரீதியில் அஹிம்சைப் போர் நடத்தப்படும் என்றும் - அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மகஜரின் பிரதிகள் கொழும்பிலுள்ள அனைத்து தூதரகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் - அதிகார இழுபறியை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரியும் -

தமிழீழ விடுதலைப்புலிகளை விடுதலை இயக்கமாக சர்வதேச நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் எனக்கோரியும் -

குடாநாட்டில் உள்ள அனைத்துப் பொதுமக்களிடமும் கையொப்பம் பெறும் போராட்டம் ஒன்றை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆரம்பித்தனர். பொதுமக்கள் இந்தப் போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று பல்கலைக் கழக மாண்வர் ஒன்றியம் கேட்டுள்ளது.

(எ-8)

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னந்றோர் பாடசாலை மாணவர்களுக்கு மதியஉணவும் வழங்கப் பட்டது. விமானப் படையினர் மட் டக்களப்பு போதானா வைத்தியசாலை, மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலை ஆகியவற்றில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்திலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. இம் மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, பூரணதுக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு - கல்முனை, கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - அம்பாறை நெடுஞ்சாலைகளில் தனியார் பஸ்சேவைகள் எதுவும் இடம் பெறவில்லை. நியூ ஈஸ்டன் பஸ் கம்பனிக்குச் சொந்தமான பஸ்வண்டிகள் மட்டுமே பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

மட்டக்களப்பு - கல்முனை, நெடுஞ்சாலையில் என்றுமில்லாதவாறு அதிகளவான படையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர். தமிழ்ப் பிரதேசங்களில் எந்தவிதமான பொது வைபவங்களும் இடம்பெறவில்லை.


சிவா வர்த்தக நிலையம்

SIVA TRADING CO

எமது நிலையத்தை

மீண்டும் பழைய முகவரியில்

இல.23, கண்டி வீதி, கிளிநொச்சி

என்னும் முகவரியில் இன்று (05-02-2004) வியாழக்கிழமை காலை 9.30- 10.30 வரையுள்ள சுபநேரத்தில் ஆரம்பிக்கின்றோம். வாடிக்கையாளர்கள் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து வாடிக்கையாளாகள், பொதுமக்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

உரிமையாளர்:-
த.தங்கராசா.

(C/33129) (40-12-36-37)


## மரண அறிவித்தல்கள்

### டானியல் அரியராசா

**(ஊழியர், அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்)**

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் அரியராசா அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காணிக்கையம்மாவின் அன்புக் கணவரும் விபுலேந்திரராசா (விபுலன்), லாவன்யா, அன்ரனிதாஸ், திவ்வியராஜா, தினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

(28088) (37-12)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### இராசதுரை இராசகுணமணி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு யாமா சந்தியை வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை இராசகுணமணி (மணியக்கா) நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி பறுவதம் அவர்களின் மருமகளும் தம்பிப்பிள்ளை தங்கம்மா அவர்களின் மகளும் புஸ்பமலா, வசந்தமலர், ஸ்ரீரதன் (ஜேர்மனி), ஜெயநதிமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*யாமாசந்தி, மானிப்பாய்.*

(சி-33128)(36-12)

தகவல்:
இ.ஸ்ரீரதன் (மகன்),
கு.தர்மகுலரட்ணம்
(மோகன் கடை - பெறாமகன).

### திருமதி சொக்கலிங்கம் தெய்வானை

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொக்கலிங்கம் தெய்வானை அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதியின் ஏகபுத்திரியும முன்னாள் அதிபர் க.சொக்கலிங்கம் (சொக்கன - நாயன்மார்கட்டு) அவர்களின் அன்பு மனைவியும் வாணி, ஆராவமுதன் (கனடா), குமரன், விமலன், ஞானஸ்கந்தன் (லண்டன்), ஜனனி, பாலஸ்கந்தன் (பிரான்ஸ்), வாசுகி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஆஸ்பத்திரி முன்ஒழுங்கை,*
*நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.*

(28090) (37-12),

தகவல்:
க.சொக்கலிங்கம் (சொக்கன்),
சொ.விமலன்.


இணைந்த கணிதம்

A/L 2004

மாதிரி வினா விடை வகுப்பு உங்கள் பரீட்சையினை இலகுபடுத்தும் வகையில் கொழும்பு, கண்டி பிரபல ஆசிரியர்

T.விஜேந்திரன்
(B.Sc., Dip. in Ed.)

ஆரம்பம் : 06.02.2004.
வெள்ளி 3.15 (பி.நே.)
முதல் வகுப்பில் உங்கள் வசதிக்கேற்ப நேர ஒழுங்கு செய்யப்படும்.

இணுவில் பொருளியற் கல்லூரி
கே.கே. எஸ். றோட் - இணுவில்.

குறிப்பு : சிந்தன்கேணி-BARATHY இந்நிறுவனத்தில் இவ்வகுப்பு ஆரம்பமாகி நடைபெறுகின்றன. (28082)(12)

விசேட ஆங்கில வகுப்பு

தரம் 6 தொடக்கம்
தரம் 9 வரையான
மாணவர்களுக்கு

ஆரம்பம்:07-02-2004
சனி காலை - 7.30 (ப.நே.)
ஞாயிறு காலை - 7.30

நாவலர்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(28048) (17)

New Stocks Available

மிகக் குறைந்த பணத்துடன் மிகப் பெறுமதியானதை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்

Pentium I, II, III
IBM, Compaq, Dell
ரூ12,000/- லிருந்து
இலவச பராமரிப்பு சேவையுடன்

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P 021 222 2674, email: stpworld@sltnet.lk


## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தம்பிப்பிள்ளை

**(பெரியஇராசா)**

மீசாலை வடக்கு, இராமாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிப்பிள்ளை அவர்கள் நேற்று (04.02.2004) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் வேலாயுதபிள்ளை (நிதிப் பணிப்பாளர் C.T.B. வவுனியா), விஜயலட்சுமி, விஜயராணி(தாதிய உத்தியோகத்தர் யாழ்.போதனா வைத்தியசாலை), விஜயராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்னமுத்து (பிரதம லிகிதர் பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம், வவுனியா), தம்பிராசா (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்), யூஜின் (ஓய்வுபெற்ற விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்), சியாமளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந்தன் (கனடா), நிசாந்தன் (கனடா), வித்தியா (A/L மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தர்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி), சுனித்தா (O/L மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), நிதர்சன் (கனடா), எரிக்பிரதாப் (பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை மதியம் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*இராமாவில்,*
*கொடிகாமம்.*

(28089)(36-12-38)

தகவல்:
யூஜின்
(மருமகன்).

### திருமதி துரையப்பா செல்லம்மா

கைதடி மத்தியைச் சேர்ந்த திருமதி துரையப்பா செல்லம்மா அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற அன்ன பூரணியம்மா ஜெயலட்சுமி, காலஞ்சென்ற இராசேஸ்வரன், நிதிராசா (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும், ஆறுமுகராசா, வேலுப்பிள்ளை, அமரர் அரியமலர், பத்மாதேவி ஆகியோரின் மாமியாரும் விக்கினேஸ்வரன் வதனா (பிரான்ஸ்), நந்தகுமார் தர்சினி (பிரான்ஸ்), தர்சன், நிகேஷன், லிசாயினி, நிதூசன், நிரோன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊற்றல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மத்தி.*
*கைதடி.*

(சி-33127) (36-12-38)

தகவல்:
சி.ஆறுமுகராசா,
ஆ.வேலுப்பிள்ளை
(மருமக்கள்).

### திருமதி சோதிப்பிள்ளை அருணாசலம்

**(பாக்கியம்)**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிப்பிள்ளை அருணாசலம் அவர்கள் நேற்று (04.02.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ந.அருணாசலம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கௌசலாதேவி அரியரத்தினம் (கொழும்பு), அ.சிறிதரன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத்திணைக்களம்), அ.ஸ்ரீகாந்தன் (அதிபர்.யா.ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ந.அரியரத்தினம் (ஓய்வுபெற்ற M.L.T. கொழும்பு), திருமதி ஸ்ரீபாலாம்பிகை, திருமதி ஸ்ரீசர்வேஸ்வரி (பிரதி அதிபர் யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சோதிவாசா"*
*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

(28091) (37-12)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.